கனி 5

மே 2025

# புதிய தேடல்

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்

## கற்போம் உருவாவோம் உருவாக்குவோம்...



நன்றியுணர்வோடு

நம்பிக்கையோடு

ஆண்டு சந்தா : 130 | தனிப்பிரதி : 10

# விஜயலெட்சுமி ஸ்டோர்ஸ்
# டெக்ஸ் டைல்ஸ் & ரெடிமேட்

**மெயின்ரோடு, மார்த்தாண்டம்.**

எங்களிடம் ஆண்களுக்கான பேன்ட், ஷர்ட், கோர்ட் சூட், சபாரிகளும் பெண்களுக்கான எல்லவித மாடல் சுடிதார்களும் மற்றும் மாணவ மாணவிகளுக்கான பள்ளி சீருடைகள், திருமணத்திற்கு தேவையான பட்டுப்புடவைகளும் தரமானதாக கிடைக்கும்.



## புதிய தேடல்

இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு

*ஆசிரியர்*

அருள் முனைவர். **இரா.பால் ரிச்சார்டு ஜோசப்**

*ஆசிரியர் குழு*



அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)

அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)

திரு. **மு. அருளப்பன்** (துணைச் செயலர்)

அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)

அருள்பணி. **ஜாக்சன்**

**குமரி ஆதவன்**

திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)

அருள் முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**

அருள்பணி. **க. சுனில்**

திரு. **ஞா. எலியாசு**

திருமதி. **டி. மேரி விஜிலா**



*தொடர்பு முகவரி*

**புதிய தேடல்**

**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**

**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**

**அஞ்சல் எண் – 629 179**

**கைபேசி : 9443693505, 8525032383**

**மின் அஞ்சல்**: newputhiathedal@gmail.com



**தனிப்பிரதி : ₹ 10**

**ஆண்டு சந்தா : ₹ 130**

**ஆயுள் சந்தா : ₹ 2000**



விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பலவண்ண அட்டை வெளிப்பக்கம் | : ₹ 12000 |
| பலவண்ண அட்டை உள்பக்கம் | : ₹ 7000 |
| முழுப்பக்கம் கறுப்பு | : ₹ 2000 |
| அரைப்பக்கம் கறுப்பு | : ₹ 1000 |




# ஆசிரியரின் அன்பு வரிகள்


அருள்முனைவர்.

**இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**


**புதுப்பிறப்படைய புதிய தேடலின் அன்பு வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்...**

**“நீ செய்யும் வேலையை விரும்பிச் செய் வெற்றி உன்னைத்தேடி வரும்”**

கல்வி என்பது வெறும் வேலைக்கான ஆயுதமாக இன்றைக்கு உருவாகிவிட்டது. ஆனால், உண்மையில் கல்வி என்பது அறியாமையின் தளத்திலிருந்து ஒருவரை அறிவின் தளத்துக்கு இடம் மாற்றுவது. இருளின் பள்ளத்தாக்கிலிருந்து வெளிச்சத்தின் சிகரத்துக்கு எடுத்துச் செல்வது.

கற்பது என்பது சமகாலச் சிந்தனையல்ல, ஆதாமுக்கு ஆண்டவரே கற்றுக் கொடுத்தார். அவன் எல்லாவற்றுக்கும் பெயரிட்டான். நோவாவுக்குப் பேழை செய்யும் வரைபடத்தைக் கடவுளே கற்றுக் கொடுத்தார். மோசேக்குச் சட்டங்களைக் கற்றுக் கொடுத்தார். இந்தக் கல்வியை அவர் கொடுத்தது, உள்ளுக்குள் ஒளித்து வைப்பதற்கு அல்ல, மாறாக மானுடத்தின் பயனுக்காகச் செயல்படுத்தற்கே.

கல்வி என்பது தகவல்களின் திரட்டு அல்ல! அது நம்பிக்கையின் நாற்று. ஒரு சமூகத்தின் வளர்ச்சி அதன் கல்வியில் இருக்கிறது. விளிம்பு நிலை மனிதர்களின் ஒரே ஊன்றுகோல் கல்வியே. கல்வியை உதறும் சமூகம் எதிர்காலத்தைப் புதைக்கிறது. கல்வியை மறுக்கும் சமூகம் மனிதத்தையே புதைக்கிறது. ஆதிக்கம் கல்வியை மறுக்கும்; ஆதிக்கம் கல்வியைக் காசாக்கும்; ஆன்மீகம் கல்வியை வாழ்வாக்கும்.

நமது வாழ்க்கை யாருமே படிக்க முடியாத ஒரு நூலாய் மாறிவிடக் கூடாது. எந்தப் பக்கத்தைத் திருப்பினாலும் அன்பும், நீதியும், மகிழ்வும், இரக்கமும், கனிவும், பணிவும் கற்றுத் தரும் ஓர் அன்பின் நூலாய் மாற வேண்டும். அதுவே கற்றலின் ஆகப்பெரிய பயன். எனவே கற்போம். உருவாவோம், உருவாக்குவோம் எனும் அறைகூவலை நம் வாழ்வாக்குவோம்.



# ஆயரின் அமுத மொழிகள்

**புத்துலகம் படைக்க புதிய தேடல்**
**வாசகர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துகள்!**

**"கல்வி என்பது உண்மைக்கான ஒரு தேடலே."**

இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதிப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! என்கிறது உரோமையர் 12:2. கல்வி என்பது நம்மை உருமாற்ற வேண்டும். சமூகத்திற்காக நம்மை அது செதுக்க வேண்டும். கல்வி மூளையில் சேமிக்கப்படும் திறம் அல்ல. இதயத்தில் நிரப்பப்படும் அறம்.

இயேசு வளர வளர அறிவிலும் ஞானத்திலும் வளர்ந்தார். சிறு வயதுக் கல்வி அவரைச் செதுக்கியது. அவர் பன்னிரெண்டு வயதில் ஆலயத்தில் அவரின் அறிவு ஞானத்தை வெளிப்படுத்தினார். தன்னை சிறப்பாக உருவாக்கிக் கொண்ட அவர், பணி வாழ்வில் புகுந்த பின் மூன்றரை ஆண்டுகாலம் மக்களை உருவாக்கினார், சீடர்களை உருவாக்கினார், புதிய சித்தாந்ததை உருவாக்கினார், புதிய திருஅவையை உருவாக்கினார். பல்லாயிரம் ஆண்டு காலம் புரியாமல் இருந்த மறை உண்மைகளை எளிமையாக மக்களுக்கு விளக்கி, புதிய சமூகத்தை உருவாக்கினார்.

எனவே, மாணவர்கள் வரப்போகும் புதிய கல்வியாண்டில் கற்றலில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். எப்பாடுபட்டேனும் கல்வியைக் கற்றுத் தேர்ந்து விட வேண்டும். அதோடு, கற்பிக்கின்ற ஆசிரியர்களும் தியாகத்தோடு கல்வியைக் கற்பித்து விளிம்பு நிலை மாணாக்கரையும் கவனம் எடுத்து கரம் பிடித்துக் காப்பாற்ற வேண்டும். மாணவர்களுக்குள் புதைந்து கிடக்கும் திறன் புதையலைத் தோண்டி எடுத்து அவர்களுக்குக் காண்பிக்க வேண்டும். குறிப்பாக, வழிகாட்டுவதற்குக் கற்றறிந்த பெற்றோர் இல்லாத குழந்தைகள் மீது தனிக் கவனம் கொள்ள வேண்டும்.

நம் அன்புக்குரிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இழந்த வருத்தமான சூழலிலும் இறைவன் நமக்கு புதிய திருத்தந்தையைச் சரியான நேரத்தில் தந்துள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அன்பைச் சுமந்தவர்களாகவும். புதிய திருத்தந்தை 14-ஆம் லியோவின் கரங்களை வலுப்படுத்த அவரோடு நமது கரங்களையும் சேர்த்துக் கொள்வோம். போர் அற்ற உலகம் உருவாகவும், திருத்தந்தை முன்னெடுக்கிற அமைதியான உலகம் உருவாகவும் தொடர்ந்து வேண்டுவோம். அறிவொளியைப் பெற்று, சமூக அவலங்களைக் களைந்து எழுச்சிகொண்ட சமூகமாய் இணைந்து பயணிப்போம்.

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

+ A. Albert

மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**,
குழித்துறை மறைமாவட்டம்

கனி 05 அகல் 15 மே 2025

*எண் படைப்பு*


1. ஆசிரியரின் அன்பு வரிகள்
2. ஆயரின் அமுத மொழிகள்
3. அப்பா
4. குழந்தைத் தொழில் இல்லா உலகம் செய்வோம்
5. செம்மொழி செந்தமிழ் காப்போம்
6. சகோதரர்கள் ஒன்றாய் .. இருப்பார்களாக!
7. கற்போம் உருவாவோம்
8. விடுமுறை உறவை வலுப்படுத்தப்படும்
9. புதிய கல்விக் கொள்கை ஆபத்தா? .. ஆனந்தமா?
10. புனித தேவசாகயம் பற்றி முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்
11. அமைதியின்றி அமையாது உலகு
12. விவிலிய வரலாறு போற்றும் தீர்ப்புகள்
13. கன்னியாகுமரி மாவட்டத்தின் கல்வி .. வரலாறு
14. பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்
15. ஆயரின் அலுவல்கள்



# அப்பா

பேரருட்பணி. **சகாய தாஸ்**

ஓர் உன்னதமான உறவு இந்த உலகத்தில் எந்த உறவும் தர இயலாத பாதுகாப்பு உணர்வு அப்பாவிடன் நாம் காண்கிறோம். சிறு வயதில் விளையாடும்போது நண்பர்களை மிரட்ட "எங்க அப்பா வரட்டும் சொல்லிக் கொடுத்து விடுவேன்" என்று சொல்வதில் அந்தப் பாதுகாப்பு உணர்வு அதிகம் வெளிப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் அவரது அப்பாவே சிறந்த ஆசிரியர், நீதிபதி, வழிகாட்டி, காவல்காரன்... என அடுக்கிக் கொண்டே போகலாம். புன்னகைக்காக, மகள்களின் பொன்நகைக்காகத் தங்கள் புன்னகையைத் துறந்தவர்கள்.

ஒரு குழந்தையின் உருவாக்கத்தில் தந்தையின் பங்கு கணிசமானது. அப்பங்கு குறைவுபடுகின்றபோது குழந்தைகள் குணங்களில் குறைபாடுடையவர்களாக வளருகிறார்கள் என்பது அனுபவம் சொல்லும் பாடம். குழந்தையின் விரல்பிடித்து நடை பழக்காத அப்பாவால் இளமையை நேர்வழிப்படுத்த இயலாது.

அப்பாவின் சாயல்தான் பிள்ளைகள். அப்பாவைப்போல நடக்க வேண்டும்; அப்பாவைப்போல தலை அசைக்க வேண்டும்; அப்பாவைப்போல பேச வேண்டும் என நினைக்காத பிள்ளைகள் இல்லை. அப்பாக்கள் குழந்தைப் பருவத்தில் அருமையான கதா நாயகனாய்த் தெரிகிறார்கள், வளர்ந்த பிறகு கொடூரமான வில்லனாகத் தெரிகிறார்கள் என்று சொல்வதில் உண்மை இல்லை. அது பிள்ளைகளின் பார்வைக் குறைபாடு மற்றும் பக்குவக் குறைபாடு காரணமாகச் சொல்லப் படுவதாகும்.

தந்தையரின் பராமரிப்பும் பாசமும் இல்லாப் பிள்ளைகள் தடம் மாறிச் சீரழிகின்றவர் 85% பேருக்கு ஒழுக்கக் குறைபாடு உள்ளவர்களில் 85% பேர் படிப்பைப் பாதியில் நிறுத்துகின்றவர்களில் 70% பேர் தற்கொலை செய்து கொள்கிறவர்களில் 63% பேர் பாலியல் வன்முறைச் செயல்களில் ஈடுபடுகிறவர்களின் 10% பேர் சிறார் குற்றவாளிகளில் 70% பேர் தந்தையை இழந்தவர்களாக அல்லது தந்தையின் அரவணைப்பு இல்லாதவர்களாக அல்லது தந்தையிடம் எதிர்மறை அனுபவம் ஏற்பட்டவர்களாக உள்ளனர் என்று ஆய்வுகள் சொல்கின்றன.

தந்தையர்கள் தங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்றுகின்றபோது சமூகத்திற்கு நல்ல குடிமக்கள் கிடைக்கின்றார்கள் எல்லாத் தந்தையர்களும் பொறுப்புள்ளவர்களாக இல்லை என்பதும் உண்மை.

**எனது தந்தை ஒரு சிறந்த ஆசிரியர்**
**எனது தந்தை ஒரு சிறந்த அறிவாளி**
**எனது தந்தை ஒரு சிறந்த விளையாட்டு வீரர்**
**எனது தந்தை ஒரு சிறந்த பேச்சாளர்**
**ஆனால் அவர் ஒரு போதும்**
**எனக்கு ஒரு சிறந்த தந்தையாக**
**என் அம்மாவிற்கு சிறந்த கணவராக**
**என் பாட்டி தாத்தாவிற்கு சிறந்த மகனாக**
இருந்ததில்லை....

இந்த வரிகளில் வலியும் வேதனையும் கலந்த உண்மை இருக்கிறது. தந்தையர் கடமை தவறுகிறபோது அவர் மற்றும் அவரது குடும்பம் மட்டுமல்ல ஒட்டுமொத்த சமூகமும் பேரிழப்பிற் குள்ளாகிறது.

அப்பா நம் ஒவ்வொருவர் வாழ்விலும் முக்கியமானவர் அவர் நமக்காக உழைப்பவர் மட்டுமல்ல நம்மை உருவாக்குபவரும் கூட அப்பாவின் இழப்பு என்பது ஈடு செய்ய இயலாத இழப்பாகவே உள்ளது. அதனால் ஏற்படும்

வெற்றிடம் என்பது எதனாலும் நிரப்பக்கூடிய ஒன்றாக இல்லை.

அப்பா என்றால் உழைப்பு என்றும் சொல்லலாம். உடல் உழைப்பைக் கொடுக்கும் தந்தையரின் பிள்ளைகளுக்கு அவர்களின் கைகள் காயநற்து உரமேறி இருப்பதை ஆச்சரியமாகப் பார்த்த அனுபவம் இருக்கும். நான் எனது தந்தையின் எனது நண்பர்களின் தந்தையரின் கரங்களைப் பார்த்திருக்கிறேன் காய்ந்து கருங்கல் போல் இருக்கும் கரங்கள் கடின உழைப்பின் சின்னங்கள். தங்களின் தியாகத்தைத் தாங்களே உணராமல் வாழ்வதால் தானோ என்னமோ இந்த உழைப்பிற்குப் பெரிய மரியாதை சமூகத்தில் தரப்படவில்லை.

நண்பர் ஒருவரின் அண்ணன் திருமண வெள்ளி விழா நிகழ்வில் பங்கேற்கச் சென்றிருந்தேன். அவரின் இரு மகள்களும் தமது தாயையும் தந்தையையும் பற்றிப் பகிர்ந்து கொண்டார்கள் ‘‘எனது அப்பாதான் என்னோட மிகச்சிறந்த நண்பன்’’ என்று இருவருமே சொன்னது வியப்பாக இருந்தது. தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளைகள் தமது அப்பாக்களைத் தங்களுக்குத் தோழனாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த தோழமை தந்தையரிடம் கிடைக்காதபோது வேறு தோழமையை நாடுவது தவிர்க்க இயலாததாகி விடுகிறது. ஒரு நல்ல தந்தை தன் பிள்ளைகளுக்கு நல்ல தோழனாய் இருப்பார். இருக்க வேண்டும்

அப்பா அனுபவம் என்பது எல்லோருக்கும் முதன்மையானது. அப்பா அனுபவம் இனிமையாக இருந்தால் வாழ்வு இனிமையானதாக மாற்றம் பெறும் அப்பா அனுபவம் துன்பியல் நிறைந்ததாக இருந்தால் வாழ்வே துயரம் நிறைந்ததாக மாறிப் போய்விடும். அனது அப்பா ஒரு போலிஸ்; எனது அப்பா ஒரு முரடர்; எனது அப்பா ஒரு துஷ்டன்; எனது அப்பா பொறுப்பற்றவன்; எனது அப்பா ஒரு குடிகாரன்; எனது அப்பா ஒரு ஊதாரி; இவை எதிர்மறை அனுபவங்கள். இத்தகைய அப்பா அனுபவங்கள் வாழ்வை எதிர்மறையாகவே பார்க்கத் தூண்டும். எனது அப்பா நல்லவர்; எனது அப்பா நேர்மையாளர்; எனது அப்பா நம்பிக்கைக்குரியவர்; எனது அப்பா ஒரு மாமனிதர்; எனது அப்பா உண்மையானவர் போன்றவை நேர்மறை அனுபவங்கள் இத்தகைய அப்பா அனுபவங்கள் வாழ்வை நேர்மறையாகப் பார்க்கப் பயிற்றுவிக்கும்.

ஒருவேளை நமது எதிர்பார்ப்பிற்கு நேர்மறையான அப்பா கிடைத்தாலும், எதிர்மறை அனுபவங்கள் உடைய அப்பா கிடைத்தாலும் அப்பாக்களை அன்பு செய்வோம். அவர்கள் மீது பிள்ளைகளும், குடும்பமும் காட்டும் அன்பு ஒருவேளை அவர்களை நமது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவர்களாக மாற்றலாம். நமது அப்பாக்களை நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்வோம். வரம்புகளின்றி அன்பு செய்வோம்.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல்



மகன் தந்தைக்குச் செய்யத்தக்க கைமாறு இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

# குழந்தைத் தொழில் இல்லா உலகம் செய்வோம்

அருள்பணி. **இரா. மேரி ஜான்**

ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் உணவு விடுதிக்குச் சென்றால் அங்கே மேசை துடைக்க வருகிறவர்கள் பதினான்கு வயதுக்கு உட்பட்ட சிறாராய் இருப்பர். சிறுதொழில் நடக்கும் ஒரு



தொழிற்சாலைக்குச் சென்றால் அங்கே சில குறிப்பிட்ட வேலைகளைச் செய்கிறவர்கள் சிறாராய் இருப்பர். பட்டாசுத் தொழிற்சாலை, ரப்பர் தோட்டம், வயல், கடல் தொழில் முதலிய அனைத்துத் தளங்களிலும் சிறார் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த காலம் ஒன்று இருந்தது. அதைவிடக் கொடுமையானது தங்கள் குழந்தைகளையே கொத்தடிமைகளாக விற்ற பெற்றோரும் காணப்பட்டது. ஆனால் இன்று அந்த நிலை தமிழ்நாட்டில் மிகவே மாறியுள்ளது என்று சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டில் குழந்தைத் தொழில் மிகவும் அருகியுள்ளது என்று சில ஆண்டுகளுக்குமுன் தமிழக முதல்வரே அறிவித்ததாய் ஒரு தகவல் உள்ளது.

அரசு தரப்பில் இத்தகைய அறிக்கைகள் வந்தாலும் உண்மை என்னவென்றால் குழந்தைத் தொழில் பல வடிவங்களில் தொடரவே செய்கிறது, பல உணவுகங்கள், குறிப்பாய் இரவு நேர உணவகங்கள் இன்றும் குழந்தைகளைச் சிறுசிறு வேலைகளுக்கு அமர்த்துகின்றன. பட்டாசு, தீப்பெட்டி முதலியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் நேரடியாகக் குழந்தைகள் நியமிக்கப்படவில்லை என்றாலும், சட்டத்தின் கண்களை மறைத்து, மறைமுகமாகக் குழந்தைத் தொழில் வீடுகளில் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. மிகவும் கேடு விளைவிக்கிற பாலியல் தொழில் போன்றவற்றில் ஈடுபடுத்துவதற்காகக் குழந்தைகள் கடத்தப்படுவதும் காணாமற்போவதும் தொடரவே செய்கிறது. குழந்தைகளை வைத்து ஆபாசப் படைப்புகள் தயாரிப்பது போன்ற வன்துரோகங்கள் சட்டத்தின் பிடியில் சிக்காமல் தொடரவே செய்கின்றன.

மேலும் சிறார் தொழிலின் தளங்கள் விரிந்துள்ளன என்பது நம் கண்களையும் கவனத்தையும் தொடாமல் நிலவும் உண்மை ஆகும். புது வகையான குழந்தைத் தொழில்கள் இன்று குழந்தைத் தொழிலின் பொதுவான இலக்கணத்தை மீறி, சர்க்கரை பூசப்பட்ட நஞ்சு போன்று, புது வடிவம் எடுத்துள்ளன.

இன்றைய குழந்தைத் தொழில் வடிவங்கள் காட்சி ஊடகங்கள், கல்வி நிலையங்கள், பொழுதுபோக்கு இடங்கள் முதலியவற்றில் முகம் காட்டுகின்றன.

குழந்தைத் தொழில் எது என்பதை நிர்ணயிப்பவை முக்கியமாய் இரண்டு காரணிகள். முதலில், பொருள் ஈட்டுவதற்குக் குழந்தைகள் பயன்படுத்தப்படல்; இரண்டாவது,

ஒருவருடைய குழந்தைப் பருவத்தையும் அதன் தன்மைகளையும் இழக்கச் செய்தல். மேலே சொல்லப்பட்ட இன்றைய தளங்களில் இந்த இரண்டும் தாராளமாகவே நிகழ்கின்றன.

காட்சி ஊடகங்கள் பல குழந்தைகளைப் போட்டிகளுக்கு உட்படுத்தி, அவற்றைக் காட்சிப்படுத்தி வருமானம் பார்க்கின்றன. அந்தப் போட்டிகளில் வெற்றி பெறுகிறவர்களுடைய பெற்றோரும் அந்தக் குழந்தைகளால் வருமானம் பெறுகின்றனர். இதில் என்ன தவறு என்று தோன்றலாம். இத்தகைய நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகள், சிறார் ஆகியோர் தங்களுடைய இயல்பான குழந்தைப் பருவத்தை இழக்கின்றனர். போட்டிகளால் மன உளைச்சல்களை அனுபவிக்கின்றனர். ஓரிருவருடைய வெற்றிக்காக மற்ற பலர் பலியாக்கப்படுகின்றனர். பார்வையாளர்களுக்குப் பொழுதுபோக்காகத் தெரியும் இந்த நிகழ்வுகள் அதில் பங்கெடுக்கும் குழந்தைகளுக்குப் பொழுதுபோக்கோ விளையாட்டோ அல்ல! மனதையும் உடலையும் வருத்தி ஈடுபட வேண்டிய தொழில்!!

அறியப்பட்ட ஒரு தொலைக்காட்சி நிகழ்த்திய குழந்தைகளுக்கான பாடல் போட்டியின் ஒரு காட்சித்தொடரை ஒரு ஜெர்மானிய நண்பரிடம் காட்டினேன். ஏழு வயதுக் குழந்தை ஒன்று அதில் சிறப்பாகப் பாடிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு அந்த ஜெர்மானிய நண்பர் என்னிடம் கேட்ட கேள்வி சற்று அதிர்ச்சியை அளித்தது! ‘‘உங்கள் நாட்டில் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம் எதுவும் இல்லையா?’’

பல ஐரோப்பிய நாடுகளில் குழந்தைகள் போட்டிகளில் ஈடுபடுத்தப்படுவதும் காட்சிப் பொருள்கள் ஆக்கப்படுவதும் தடை செய்யப்பட்டுள்ளன. இயல்பான அவர்களுடைய பள்ளி நிகழ்வுகள், கோலில் நிகழ்வுகள் முதலியவற்றை மட்டுமே காட்சி ஊடகங்களில் பார்க்க இயலும்.

இரண்டாவது, கல்வி நிலையங்களுக்கு வருவோம். கல்வி என்பது குழந்தைப் பருவத்திலிருந்தே இயல்பாக, இனிமையாக நிகழ வேண்டிய ஒரு நடைமுறை. அன்றாட அனுபவ, முறைசாரா, முறைசார் என்று மூன்று வகைகளில் கல்வியாக்கம் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. அன்றாட அனுபவக் கல்வியும், முறைசாராக் கல்வியும் இயல்பாக நிகழ்கின்றன. முறைசார் கல்வி சமூகத்தால் உருவாக்கப்படுகிறது. ஒரு சமூகம் தனக்குரிய மக்களை உருவாக்குவதே முறைசார் கல்வியின் நோக்கம் அந்த முறைசார் கல்வியும் குழந்தைகளின் இயல்புக்கும் சமூகத்தின் தேவைக்கும் ஏற்ப இனிமையாக நிகழ வேண்டியதாகும். ஆனால் இன்றைய கல்வி குழந்தைகளுக்கு ஒரு சுமையாக, கடின உழைப்பை நல்க வேண்டிய ஒரு செயலாக மாற்றப்பட்டுள்ளது.

கொரோனாக் காலத்தில் கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருந்த நிலையில், அதாவது, இணைய வழிக் கல்வி முறைகள் வகுக்கப்படுவதற்கு முன்பு, பெரும்பான்மையான மாணவர்கள் மகிழ்வுடனும் நிம்மதியுடனும் காணப்பட்டது உண்மை வரலாறு. ஒரு சில மாணவர்கள் தங்கள் நண்பர்களையும் அன்பான வெகுசில ஆசிரியர்களையும் பார்க்க முடியவில்லை என்று கருத்து தெரிவித்ததாய் ஓர் ஆய்வு வந்தது. படிப்பு தடைபட்டதற்காக யாரும் வருந்தவில்லை! அந்த அளவுக்குக் கல்வி அவர்களுக்கு ஒரு சுமையாக மாறியிருந்தது. புதிய கல்விக்கொள்கையால் கல்வி இப்போது இன்னும் அதிகச் சுமையாக மாறியுள்ளது என்பது உண்மை.

கல்வியை அதிகச் சுமையுள்ளதாக்குவது அதில் புகுத்தப்பட்ட போட்டி சார்ந்த தேர்வுமுறைகள் என்பதை நிரூபிக்கத் தேவையில்லை. போட்டிகளின் நடைமுறையாகிய ஒப்பீடும், போட்டிக்காகத் தங்களைத் தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் குழந்தைகளில் திறன் வளர்ச்சியைவிட மன உளைச்சலையே அதிகமாக விளைவிக்கின்றன. படிப்பில் மட்டுமல்ல திறன்களை வெளிப்படுத்துவதிலும் போட்டி முறையே கல்வி நிலையங்களில் கடைபிடிக்கப்படுகிறது.

இது அரசு செய்கிற ஒரு சதி என்பதை யாரும் உணர்வதில்லை. தன் குழந்தைகள்,

மாணவர்கள் அனைவருக்கும் தேவையான அளவில் கல்வி வாய்ப்புகள், வேலை வாய்ப்புகள் ஆகியவற்றை வழங்க வேண்டியது அரசின் கடமை. எல்லாருக்கும் போதிய வாய்ப்புகளை உருவாக்க முயற்சி எடுக்காத அரசுகள் போட்டிகளைப் புகுத்திப் பலரை வெளியேற்றுகின்றன. தனியார் நிறுவனங்கள் கல்வியில் அரசுக்குத் தோள் கொடுக்கலாம். முன்பு அப்படிதான் இருந்தது. எடுத்துக்காட்டாக, கிறிஸ்தவர்கள் நிகழ்த்திவந்த கல்வி நிறுவனங்களை அரசு தன் கட்டுப்பாட்டில் வைத்து, ஆசிரியர்களுக்கான ஊதியம், பிற செலவினங்கள் ஆகியவற்றையும் அரசே கவனித்து வந்தது. ஆனால் இன்று நம் அரசுகள் இதனைத் தனியாரிடமே விட்டுவிடுகின்றன. போட்டிகள் வழியாகவே தனியார் நிறுவனங்கள் கல்வி வணிகத்தை மேற்கொள்கின்றன.

“நலமான போட்டி” (ஆரோக்கியான போட்டி) என்ற ஒரு கற்பனைக் கருத்துருவை உருவாக்கிப் போட்டிகளை நியாயப்படுத்தும் மனநிலை இன்று பரவலாய் எல்லாரிடமும் உள்ளது. “நலமான போட்டி” என்பது “வட்டமான சதுரம்” “நலமான புற்றுநோய்” என்பனபோல் சொல்முரண் என்று போட்டியை ஆழமாய் ஆய்வு செய்துள்ள ஆல்பி கோன் போன்ற அறிஞர்கள் தெளிவாக நிரூபிக்கிறார்கள்.

கல்வி நிலையங்களை விட்டுவிட்டுப் பொதுப் பொழுதுபோக்கு இடங்களுக்கு வந்தால் அங்கும் குழந்தைகளையே அதிகமாய் ஈடுபடுத்தும் நிலையைக் காண்கிறோம். நம் பகுதியிலுள்ள பங்குத் தளங்களை எடுத்துக்கொள்வோம். பங்கில் எந்த விழா கொண்டாடப்பட்டாலும் அங்கே பெரியவர்களை மகிழ்விக்கிற பொழுதுபோக்குகளை வழங்க வேண்டியவர்கள் குழந்தைகள் என்பது எழுதப்படாத விதியாகவே உள்ளது. ஆண்டு முழுவதும் குழந்தைகளுடைய நலம், வளர்ச்சி, பயிற்சி என்று எதிலும் எந்த அக்கறையும் காட்டாத இளையோர், தொழிலாளர் முதலிய பெரிவர்களுக்கான அமைப்புகள் தங்கள் இருப்பை வெளிப்படுத்தவும் தங்களை விளம்பரப்படுத்தவும் அவர்கள் பயன்படுத்துவது குழந்தைகளையே. பங்கிலுள்ள குழந்தைகளை அழைத்து, அவர்களுக்குப் போட்டிகள் வைத்து. வெற்றி பெறுகிறவர்களுக்குப் பரிசுகள் வழங்கி தங்களை விளம்பரப்படுத்துகிறார்கள். தங்கள் பிள்ளைகளுக்குப் பரிசு கிடைக்கும். அல்லது அரங்கில் ஏற வாய்ப்பு ஏற்படும் என்று நினைத்து அவர்களை மேற்கண்ட போட்டி நிகழ்வுகளுக்கு அனுப்பும் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் மேற்கண்ட அமைப்புகளால் கருவிகள் ஆக்கப்படுகிறார்கள், கரண்டப் படுகிறார்கள் என்பதை உணராதது வருதற்குரியது.

மேற்கண்டவை குழந்தைகளுக்குத் திறன் வளர்க்கப் பயன்படுகின்றன, அவை குழந்தைகளை மகிழ்விக்கின்றன என்று வாதிடலாம். குழந்தைகளுக்கு ஒரு தற்காலிக மகிழ்வும் உற்சாகமும் ஏற்படுவது உண்மை என்றாலும் அந்த மகிழ்ச்சி பங்கெடுக்கும் எல்லாருக்கும் கிடைக்கிறதா என்ற குறிப்பாக, கேள்வியை எழுப்ப வேண்டும். தோல்வி அடைகிறவர்கள் மகிழ்கிறார்களா? இப்படிப்பட்ட போட்டிகளால் ஏற்படுகிற மகிழ்ச்சி எவ்வளவு காலம் நிலைத்திருக்கும்? குழந்தைகளின் திறன் வளர்க்கின்றன என்பது ஒரு மாயை. போட்டிகளில் ஈடுபடுத்தப்படும் ஒரு குழந்தையிடம் வாழ்வுக்கான திறன் என்ன வளர்ந்துள்ளது. அதனால் அந்தக் குழந்தையின் வாழ்வுக்கோ அல்லது அவர்களுடைய குடும்பங்கள், சமூகம் ஆகியவற்றின் நலனுக்கோ என்ன பயன் எப்படி ஏற்பட்டுள்ளது என்று ஆய்வு செய்தால்தான் தெரியும்.

எடுத்துக்காட்டாக, பாட்டுப் போட்டிகளில் பங்கெடுக்கும் எத்தனை பேர் இன்று பாடகர்களாக வளர்ந்துள்ளார்கள்? விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுக்கும் எத்தனை பேர் இன்று விளையாட்டு வீரர்களாகத் திகழ்கிறார்கள்?

இப்போது புரிகிறதல்லவா. இவையெல்லாம் நம்முடைய பொழுது போக்குக்காக மட்டுமே உதவியுள்ளன என்பது?

தொடக்கத்தில் குறிப்பிட்டது போன்ற குழந்தைத் தொழில் வெளிப்படையாய் அதிகம்

நிகழவில்லை என்றாலும் புது வடிவக் குழந்தைத் தொழில்கள் நிகழவே செய்கின்றன. குழந்தைத் தொழில் இல்லா உலகம் செய்ய வேண்டுமென்றால் மேற்கண்ட புது வடிவக் குழந்தைத் தொழில் முறைகளையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

குழந்தைகள் இயல்பாகவே தங்களை வளர்த்துக்கொள்ளும் ஆர்வமும் துடிப்பும் உடையவர்கள். ஆனால் அவர்களுடைய பயிற்சி முறைகளில் மேற்கண்டவாறு தொழில் தன்மையைப் புகுத்தினால் எதிர்விளைவுகள் தான் ஏற்படும். பல குழந்தைகள் தொடக்கக் கல்வியின்போதே அல்லது அது நிறைவுறும் போது கல்வியில் நாட்டத்தை இழந்து விடுகின்றனர். கல்வி தொழில் முறைப்படுத்தப் படுவதும், அதில் போட்டிகள் புகுத்தப்படுவதும் இதற்கு முக்கிய காரணங்கள். மேலே குறிப்பிடப்பட்டுள்ள காட்சி ஊடகங்கள், கல்வி நிலையங்கள், பொழுதுபோக்கு இடங்கள் முதலியவற்றில் தொழில் முறையாகக் குழந்தைகளை ஈடுபடுத்தாமல் குழந்தைகள் தங்கள் ஆர்வத்துக்கேற்ப இயல்பாய் ஈடுபட வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுப்பதே குழந்தைத் தொழில் இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்கும் வழியாய் இருக்கும்.

இன்றைய நம் கல்விமுறையில் மிகுந்த மாற்றம் தேவைப்படுகிறது. அது முற்றிலும் நம் கையில் இல்லை என்றாலும் நம் கல்வி நிறுவனங்களுடைய கைகளுக்கு எட்டும் வகையிலாவது கல்வியை இனிய அனுபவமாக்க முயல்வது இன்றைய அவசரத் தேவையாகும். போட்டிகளைக் குறைத்து, ஒருவரையொருவர் வளரவைக்கும் கூட்டுறவு முறைகளை முன்வைப்பது இயலாத செயலன்று. கல்வி நிலையங்களின் பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள் முதலியோருக்கு அதற்குரிய மனம் தேவை.

குழந்தைகளின் நலன், வளர்ச்சி முதலியவற்றை முதல் நோக்கமாகக் கொள்ளாத எந்த நிகழ்விலும் குழந்தைகளை ஈடுபடுத்துவது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். கலைநிகழ்வுகளைக் குழந்தைகள் தன்னார்வமாகவும் தங்களுக்கே உரிய அமைப்புகளிலும் மட்டுமே நிகழ்த்த வேண்டும். மற்றவர்களுடைய விளம்பரத்துக்குக் குழந்தை களைக் கருவியாக்குவதை முற்றிலும் கைவிட வேண்டும்.

இசை, பாடல், நடனம், நாடகம், மேடைப்பேச்சு, ஓவியக்கலை முதலிய திறன்கள் எல்லாரிலும் வளர்க்கப்பட வேண்டியவை. அவற்றிலும் அவர்களுடைய இயல்பு நாட்டத்தின் அடிப்படையில் அவர்கள் தன்னார்வமாய் ஈடுபட வழிவகுக்க வேண்டும். அவர்களுடைய வளர்ச்சிக்காக மட்டுமே அவை அர்ப்பணிக்கப்பட வேண்டுமே தவிர பெற்றோருடைய பெருமைக்காகவோ, நிகழ்த்துகிற நிறுவனத்தின் பெயருக்காகவோ அல்ல.

சமூக மனச்சான்று, குழந்தைநலச் சமூக உணர்வு ஆகியவை மக்களுடைய பொது மனச்சான்றாக வளர்ந்தால், தன்னலமும் இலாப நோக்கும் மாறினால், சட்டங்களின் உதவியுடன் குழந்தைத் தொழிலை ஒழிப்பது கைகூடலாம். குழந்தைத் தொழிலையும் குழந்தைகள் மீது வன்முறையையும் வளர்ப்பவர்கள் சமூகத்தில் உயர்வாய் வாழும் மனிதர்களே.

முன்பு சொல்லப்பட்ட முறையில் குழந்தைகளுடைய பயிற்சியையும் வளர்ச்சியையும் அமைத்து, அத்துடன் சமூக மனச்சான்றையும் சீராக்கும் நடைமுறையுடன் இந்தச் சிக்கலை அணுகினால் குழந்தைத் தொழில் இல்லாத உலகம் செய்வது சாத்தியமே

இந்தக் கட்டுரையில் உள்ள கருத்துகள், பரிந்துரைகள் முதலியவைபற்றிய கேள்விகள் எழுந்தால் அவற்றை இந்த இதழின் ஆசிரியர் வழியாகத் தெரியப்படுத்தலாம். இதுபற்றிய ஓர் உரையாடலையோ கருத்துப் பரிமாற்றத்தையோ இந்தப் புதிய தேடலில் தொடங்குவது பயனுள்ளதாய் இருக்கும் என்று கருதுகிறேன்.

**உங்கள் வாசிப்புக்கு நன்றி.**



# செம்மொழி செந்தமிழ் காப்போம்

பேரருட்பணி. **ஒய்சிலின் சேவியர்**

தமிழ்மொழி இனிய மொழி, இன்பமான மொழி 'தமிழ்' என்றச் சொல்லிற்கு இனிமை, இன்பம் என்பது பொருள். எனவேதான் "செந்தமிழ் நாடனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாடினார் பாரதி. செம்மொழி என்பது ஒரு மொழியின் இலக்கியப் பழமையை அடிப்படையாக் கொண்டும், இலக்கியத்தரம் மற்ற மொழிகளிலிருந்து வேறுபட்டு நிற்கும் தனித்துவம், தனித்தன்மை ஆகியவற்றின் அடிப்படையிலும் உயர்தனிச் செம்மொழி என்ற உயரத்தைப் பெறுகிறது. தமிழ்மொழி நீண்ட இலக்கிய, இலக்கணப் பாரம்பரியத்தைக் கொண்டு, எழுத்து மற்றும் பேச்சு வழக்குகளை உள்ளடக்கியதாகவும் அமைகிறது. ஒரு மொழியின் செம்மொழி உயர்வுக்கு அம்மொழியின் பழமை வாய்ந்த இலக்கியங்களும், கலையோடு அமைந்த படைப்புகளும் முக்கியமானவை. தமிழ் மொழி தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே எழுத்து வழக்காகவும் பேச்சு வழக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தமிழின் செம்மொழித் தகுதிக்கும், தரத்திற்கும் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களும், திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரும், இறையியனார் களவியல், உரை போன்றவை காலத்தால் அழியாமல் நிற்கின்றன.

வேற்று மொழியில் உயிர்த்துடிப்பும் உத்வேகமும் நிறைந்த இலக்கியங்கள் உருவாகச் செம்மொழியாம், தமிழ்மொழி காரணமாக அமைவது நமக்கு ஆனந்தத்தையும், அக்களிப்பையும் கொடுக்கிறது. உலகில் பேசப்பட்ட எத்தனையோ மொழிகள் காணாமல் அழிந்து போயிருக்கின்றன. ஆனால் இன்றும் இளமைப் பொலிவு மாறாமல் பல மொழிகள் உருவாகக் காரணமாக நிற்கும் நமது தமிழ் மொழி தகுதியும் தரமும் வாழ்ந்த உயர்மொழி என்பதில் நாம் பெருமை அடைவோம். நம் தமிழ் மொழி கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி. தமிழ் மொழிக்கு மட்டுமே 16 பண்புகள் உள்ளதாகத் தேவநேய பாவணர் பட்டியலிடுகிறார். அவை தொன்மை, முன்மை, எளிமை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை ஆகியன ஆகும். இனிமையும், நீர்மையும் தமிழெனலாகும் என்கிறது பிங்கலந்தை என்னும் நிகண்டு நூல்.

தமிழ் மொழியைப் பற்றிப் புகழாத புலவர்கள் இல்லை. பாடாத பாவலர்கள் இல்லை. ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்கிறார் திருமூலர். ''என்றுமுள தென்தமிழ்'' என்று புகழ்கிறது கம்பராமாயாணம். ''இருந்தமிழே யுன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'' என்கிறது தமிழ்விடுதூது! ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்கிறார் பாராதியார். ''தமிழுக்கும் அமுதென்று பேர்– அந்தத் தமிழெங்கள் உயிருக்கு நேர்'' என்று மகிழ்கிறார் பாரதிதாசன். இவ்வாறு சிறப்பும் சிறப்பியல்பும் கொண்ட தமிழ் மொழி 2004–ஆம் ஆண்டு ஜூன்–6 ஆம் தேதி இந்திய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. அத்தினத்தை நினைவுகூர்வதோடு நமது தமிழ்

சிந்தனை சிதைந்து, சிதறிவிடக்கூடாது. அதைச் சிந்தையில் இருத்தி விந்தை செய்வோம், வீதிக்குக் கொண்டு வருவோம்.

இப்படிப்பட்ட செவ்வியல் செந்தமிழ் செம்மொழித் தமிழைத் திட்டமிட்டுத் தீர்த்துக் கட்டும் தீர்மானத்தை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது. ஒரு இனத்தை அழிக்க வேண்டுமென்றால் மொழியை அழித்தால் போதும். தமிழனைத் திட்டமிட்டு அழிப்பதற்காகவே ஒன்றிய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழை வழக்கு மொழியாகவோ, வழிபாட்டு மொழியாகவோ வைப்பதற்குத் தயங்குவதோடு தகாராறுகளையும் செய்து வருவது வேதனையாகவும் இருக்கிறது. தமிழை அழிக்க வேண்டுமென்பதற்காக ஆங்கில வழி பள்ளிகளைத் திறந்து விட்டதோடு மட்டுமல்ல தமிழ் வழிக் கல்விக் கூடங்களைப் பற்றிக் கவலைப்படாமல் அழிவதற்கு அரசு வழி வகுத்தது. இப்போது பள்ளிக்கூடங்களைக் காப்பற்ற முயற்சிகள் பல மேற்கொண்டாலும் பலன் இல்லாமல், பயனற்றுக் கிடக்கிறது.

நாம் தமிழைக் காப்பற்றும் கட்டாய நிலையில் இருக்கிறோம். தமிழ் மொழியைத் தலைநிமிரச் செய்வோம். எச்சூழலிலும் தகுதியை இழக்காமல் பார்த்துக் கொள்வோம். பிள்ளைகளை முடிந்த அளவு தமிழ் வழிக் கல்வியைப் படிக்க வைப்போம். தமிழில் பேச வைப்போம். எழுதுவதற்கும் பேசுவதற்கும் தெரியாத இயலாத தலைமுறைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். தமிழ் தாழ்ந்தது என்கிற எண்ணத்தைப் பிஞ்சு மனங்களில் விதைத்து தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இவற்றை யல்லாம் மனதில் கொண்டு செம்மொழி செந்தமிழ் காப்போம். வளமையான தமிழ் உலகம் காண்போம்




தமிழைக் காப்பாற்றுவோம், தமிழன் என்று தலைநிமிர்ந்து நிற்போம்.

## அன்னையர் தின வாழ்த்துகள்!

பிறந் தாய்

அழு தாய்

சிரித் தாய்

தவழ்ந் தாய்

நடந் தாய்

வளர்ந் தாய்

கோபித் தாய்

புரிந் தாய்

உணர்ந் தாய்

படித் தாய்

பணிபுரிந் தாய்

சம்பாதித் தாய்

சேமித் தாய்

சாதித் தாய்

இவை அனைத்திலும் உன் தாய் இருக்கிறாள் மறந்து விடாதே!

அம்மா நீ இறந்தும் இருந்து கொண்டிருக்கிறாய். நான் இருந்தும் இறந்து கொண்டிருக்கின்றேன்.

கையை தொட்டிலாக்கி இரத்தத்தை பாலாக்கி என்னை வளர்த்த

அன்னையே!

ஆளாக்கியவளே!

இனியவளே!

ஈன்றவளே!

உண்மையானவளே!

ஊக்கம் கொடுத்து என் வாழ்க்கையை

ஏற்றம் பெற செய்தவளே!

வணங்குகிறேன் உன்னை!



# சகோதரர்கள் ஒன்றாய் இருப்பார்களாக!

அருள்பணி **வ. இரபேல்**

இயேசு கிறிஸ்து தம்மைத் தலைமைக் குருவாகப் பாவித்து யூத முறையில் இறைவேண்டல் செய்தது யோவா 17: 1-21 பகுதியில் காணப்படுகிறது. அது இயேசுவின் 'குருத்துவ இறைவேண்டல்' என வருணிக்கப் படுகிறது. அதில், தம்முடைய சீடர்கள் கற்பிக்கும் இறைவார்த்தையின் வழியாகத் தம்மீது நம்பிக்கை கொள்வோரின் ஒற்றுமைக்காக அவர் வேண்டுகிறார் "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல், அவர்களும் நம்முள் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால், நீர் என்னை அனுப்பினீர் என உலகம் நம்பும். நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு, நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன். இவ்வாறு, நான் அவர்களுள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால், அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக" (யோவா 17:21-23). தந்தையும் தாமும் ஒன்றாய் இருப்பதுபோல நம்பிக்கையாளர்களும் ஒன்றாய் இருக்க வேண்டும் என இயேசு வேண்டுகிறார்.

ஏற்கெனவே யோவா 10:26-ல் காண்கிறபடி, நற்செய்தியாளர் யோவான் காலத்திலேயே சீடர்கள் ஒற்றுமையாக இல்லை என்பது தெரிகிறது. அதனால்தான் இயேசு, "இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவிசாய்க்கும். அப்போது, ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும்" என உரைக்கிறார். இவ்வாறு, ஒற்றுமையின் முழுமை ஏற்படும்போது, அது உலகிற்குச் சான்றுபகர்வதாக அமையும்.

யோவான் நற்செய்தியில் பொதுவாகவே காண்கிறபடி, ஒன்றிப்புக் குறித்த இரண்டு பரிமாணங்கள் இங்குக் காணப்படுகின்றன. செங்கோட்டு நிலையில், ஒன்றிப்பு என்பது, தந்தைக்கும் இயேசுவுக்கும் இடையே உள்ள உறவில் காணப்படுகிறது. கிடைநிலையில், ஒன்றிப்பு என்பது, தந்தைக்கும் இயேசுவுக்கும் இடையேயான உறவின் அடிப்படையில் சகோதரர்கள் ஒருவரையொருவர் அன்பு செய்வதற்கான கட்டளை தரப்படுவதில் அடங்கி உள்ளது. இந்த இருவகை ஒன்றிப்பில் எதுவும் மனித உறவின் வெளிப்பாடு என எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகாது. அது அமைப்புச்சார்ந்த ஒன்று எனவும் எடுத்துக்கொள்ளுதல் ஆகாது. ஏனெனில், யோவானைப் பொறுத்தவரை, இரண்டு வகை ஒன்றிப்பும் தந்தை தந்த வெளிப்பாட்டில் அமைந்து, இயேசு கிறிஸ்துவில் நடந்தேறியுள்ளது. இத்தகு ஒன்றிப்பு நம்பிக்கை கொண்ட சமூகத்தின் தனிப்பட்ட அனுபவம் எனவும் புரிந்துகொள்ளுதல் கூடாது. ஏனெனில், இத்தகு ஒன்றிப்பு உலகிற்குச் சவால் விடுவதாகக் காணப்படுகிறது. இயேசு தந்தையுடன் கொண்டிருக்கும் ஒன்றிப்பும் இதுபோலவே மீட்புக்கும் தண்டனைக்கும் சவால் விடுவதாக அமைந்திருந்தது (காண் வசனங்கள் 21, 23) தந்தையும் இயேசுவும் கொண்டிருக்கும் அன்புறவைச் சொல்லும் நற்செய்தியினால் சகோதரரிடையே ஒற்றுமை மிளிர வேண்டும் என்பதே இங்கு இலக்காக உள்ளது.

உயிர்த்த கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டிருந்த தொடக்கக் கிறிஸ்தவர்கள் இந்த உண்மையை உள்வாங்கிக் கொண்டார்கள்.

அவர்கள் கிறிஸ்துவில் திருமுழுக்குப் பெற்றதால், தந்தைக்கும் இயேசுவுக்கும் இடையேயான உறவைத் தங்கள் வாழ்வில் வெளிப்படுத்த முயன்றார்கள். நம்பிக்கையாளர் அனைவரும் நட்புறவில் நிலைத்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றாயிருந்தார்கள், எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தார்கள் (திப 2:41, 44). நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தம் உடைமைகளில் எதையும் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது (திப 4.32), சகோதரர் ஒன்றாய் இருந்தது அவர்களுடைய கிறிஸ்தவப் பொதுவுடைமையில் தெரிந்தது. அவர்கள் அமைப்புமுறை சாரா நிலையில் ஆவிக்குரியவர்களாய் வாழ்ந்தார்கள் எனவே தன்னார்வத்துடன் தங்கள் உடைமைகளைப் பகிர்ந்து கொண்டார்கள். இத்தகு பகிர்வு அவர்கள் இல்லங்களில் அப்பம் பிட்டுக் கொண்டாடிய திருப்பலியின் பொருளை எண்பித்துக் காட்டியது. தொடக்கத்தில் எபிரேயம் பேசும் எருசலேம் யூதர்களிடம் காணப்பட்ட இந்த நட்புறவு, பின்னர் கிரேக்க மொழி பேசும் யூதர்களையும் உள்ளடக்கியதாக மாறியது என்பதைத் திருத்தொண்டர்களை நியமித்தல் பகுதியில் காண்கிறோம் (திப 6:1-7). எபிரேயம் பேசும் சகோதரர்களுக்கும் கிரேக்கம் பேசும் சகோதரர்களுக்கும் இடையே கலச்சாரம். இறையியல் மற்றும் வழிபாட்டு முறையில் நிலவிய பிளவு, கிரேக்கம் பேசும் திருத் தொண்டர்களைப் பந்தியில் பரிமாறும் பணிக்குத் தேர்ந்தெடுத்த நிகழ்வின் மூலம் மறைந்துபோனது, அங்கே சகோதரர் மீண்டும் ஒன்றுபடலாயினர்.

இந்த நட்புறவு பிறவினத்தாரையும் உள்ளடக்கியதாக மாறிவிட்டதைத் திருத்தூதர் பணிகள் நூல் கூறுகிறது. அகபு என்னும் இறைவாக்கினர் முன்னறிவித்ததற்ணேங்க, உலகெங்கும் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது, அந்தியோக்கியாவில் வாழ்ந்த பிறவினத்துக் கிறிஸ்தவச் சகோதரர்கள் யூதேயாவில் வாழ்ந்த யூதக் கிறிஸ்தவர்களுக்குத் தங்களால் இயன்ற பொருளுதவியைப் பர்னபா, சவுல் ஆகியோர் மூலம் அனுப்பிவைத்தார்கள் (திப 11:27-30). பின்னர், பவுலடியார் தாம் ஏற்படுத்திய திருச்சபைகளிடமிருந்து நன்கொடைகள் திரட்டி, எருசலேமில் வாழ்ந்த ஏழையரான யூதருக்கு வழங்க முயன்றார் (காண் உரோ 15:26. கலா 2:10. 1 கொரி 16:1-3, 2 கொரி அதி 8:49) இவ்வாறு, பிறவினத்தாரும் யூதரும் ஒரே இறைநம்பிக்கையில் பங்கு கொண்டது உறுதியாயிற்று. அவர்களிடையே இருந்த நட்புறவு இதனால் வெளிப்பட்டது.

தந்தையுடன் இயேசு கொண்டிருந்த



ஒன்றிப்பின் அடிப்படையில் கிறிஸ்தவச் சகோதரர் கொண்டிருந்த உறவு ஒன்றிப்புக்குக் கொரிந்து திருச்சபையில் சோதனை ஏற்பட்டது. அதற்குப் பவுலடியார் தீர்வு தருகிறார்:

(1) தங்களுக்குப் பிடித்த நற்செய்திப் பணியாளர்களை (எ.கா. பவுல், அப்பெல்லோ. கேபா. கிறிஸ்து என்னும் ஒருவர் காண். 1 கொரி 1:12: 34) பின்பற்றுவதை விட்டுவிட்டு, அவர்கள் கடவுளுக்குப் பணி புரியும் மனிதர்களே எனக் கொள்ள வேண்டும்.

(2) நம்பிக்கையாளர்கள் தங்களுக்குள் ஏற்படும் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ள வழக்கு மன்றங்களுக்குச் செல்லாமல்,

தங்களுக்குள்ளேயே அவற்றைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், கிறிஸ்தவர்கள் வானதூதர்களுக்கும் தீர்ப்பு அளிப்போர் ஆவார்கள் (1 கொரி 6:3-5). (3)

(3) இல்லங்களில் ஆண்டவரின் திருவிருந்து கொண்டாடும்போது, செல்வர் ஏழையருக்கு முந்தி உண்டுவிடக் கூடாது. தாங்கள் நினைவுகூர்ந்து கொண்டாடுவது ஆண்டவரின் உடலும் இரத்தமும் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது (1 கொரி 11:20-26, 33).

(4) ஆவியாரின் அருங்கொடைகளைப் பெற்றவர்கள் அவற்றின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வைப் பாராட்டக் கூடாது. அயல்மொழி பேசும் வரம் பெற்றோர். தாங்கள் ஏற்கெனவே உயிர்த்த கிறிஸ்துவில் பங்கு பெற்றுவிட்டதாக எண்ணி, மற்றவர்களைத் தாழ்வாக எண்ணினார்கள். பவுலடியாரைப் பொறுத்தவரை, இறைவாக்கு வரம் உட்பட எல்லா அருங்கொடைகளையும் விட, அன்பே முதன்மையானது (1 கொரி அதி 12-14).

கிறிஸ்தவர்கள் ஒரே எண்ணமும் ஒரே அன்பும் ஒரே உள்ளமும் கொண்டவர்களாய்த் திகழ்ந்து, தமது மகிழ்ச்சியை நிறைவாக்க வேண்டும் எனப் பவுலடியார் பிலிப்பியரைக் கேட்டுக்கொள்கிறார். அவர்கள் கட்சி மனப்பான்மைக்கும் வீண்பெருமைக்கும் இடந்தராமல், மனத்தாழ்மையோடு ஒருவரை யொருவர் தங்களிலும் உயர்ந்தவராகக் கருத வேண்டும். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே அவர்களிடம் இருக்க வேண்டும். கிறிஸ்துவோ, கடவுள் வடிவில் விளங்கினாலும் தம்மையே தாழ்த்தி, அடிமையின் வடிவை ஏற்று, சிலுவைச்சாவையே ஏற்கும் அளவுக்குத் தம்மைத் தாழ்த்திக்கொண்டார் (பிலி 2:2-8)

“சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று! எத்துணை இனியது! ஆரோனின் தலையினிலே ஊற்றப்பெற்ற நறுமணத்தைலம் அவருடைய தாடியினின்று வழிந்தோடி அவர்தம் அங்கியின் விளிம்பை நனைப்பதற்கு அது ஒப்பாகும்” எனத் திருப்பாடல் ஆசிரியர் சகோதர ஒற்றுமையை



வியந்து பாடியுள்ளார் (திபா 133). இதனை உள்வாங்கியுள்ள திருச்சபை தந்தையும் இயேசு கிறிஸ்துவும் கொண்டிருக்கும் உறவு ஒன்றிப்பின் அடிப்படையிலும், இயேசு கிறிஸ்து எதிர்நோக்கி மன்றாடிய நம்பிக்கையாளர்களின் ஒன்றிப்பின் அடிப்படையிலும் (யோவா 17:21) கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. புதிய பெந்தக்கோஸ்து எனத் திருத்தந்தை புனித 23-ஆம் யோவான் வருணித்துள்ள இரண்டாம் வத்திக்கான் சங்கம், கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தே பல ஏடுகளை உருவாக்கியுள்ளது. தொடர்ந்து, பல்வேறு கலந்துரையாடல்களும், ஒன்றிப்பு வழிபாடுகளும் நடந்து வருகின்றன. சகோதர ஒற்றுமை மனிதநேய அடிப்படையில் அமைய வேண்டும் என்பதால், பல்சமய உரையடல்களும் நடந்தேறி வருகின்றன. அன்பியங்கள் என்னும் முயற்சிகளையும் தாண்டி, குறிப்பிட்ட இடத்தில் வாழும் மாற்றுச் சமயத்தாரையும் உள்ளடக்கிய ‘அக்கம் பக்கம் சமூகங்கள்’ என்னும் அமைப்புகள் போன்றவையும் இப்போது வளர்ந்து வருகின்றன.

# கற்போம் உருவாவோம்

தமிழ்மாமணி. **S.M. செபஸ்டியான்**
நம்வாழ்வு பொன்விழா விருதுபெற்றவர்

கல்வி கற்போம் உருவாவோம்
கடமை உணர்ந்து கற்றிடுவோம்
கல்வி அறிந்து உருவாவோம்
கண்ணிய முடனே உருவாக்குவோம்

வாழ்வு உயர உருவாவோம்
வளமை சேர உருவாவோம்
தாழ்வு நீங்க உருவாவோம்
தாய்மொழி வளர உருவாக்குவோம்

நாட்டுப் பற்றைக் கற்றிடுவோம்
நானிலம் மகிழ கற்றிடுவோம்
கேட்டை நீக்கக் கற்றிடுவோம்
கட்டுப் பாட்டை உருவாக்குவோம்

ஆசிரி யர்வழி உருவாவோம்
அறிவியல் விந்தை கற்போமே
மாசில் லாமல் வாழ்வதற்கு
மாண்புறு கல்வி கற்றிடுவோம்

அன்பு நெறியில் உருவாவோம்
அறவழி நின்று உருவாவோம்
பண்பு நலத்தைக் கற்றிடுவோம்
பகுத்து அறிய உருவாக்குவோம்

கற்றுத் தெளிந்து உருவாவோம்
கருத்துச் செறிவாய் உருவாவோம்
பெற்றோர் போற்றிட உருவாவோம்
பெரியோர் சொல்மொழி உருவாக்குவோம்

திறமை யுடனே கற்றிடுவோம்
திருத்த முடனே கற்றிடுவோம்
வெறுப்பை மாற்றி உருவாவோம்
விந்தை பலவும் கற்பிப்போம்

மாணவர் மகிழ கற்பிப்போம்
மாற்றம் வந்திட கற்பிப்போம்
கோணல் நிமிரக் கற்பிப்போம்
கொள்கை யுடனே உருவாக்குவோம்

இயற்கைப் பேண கற்பிப்போம்
இன்னல் அகல கற்பிப்போம்
செயற்கை மாறிட கற்பிப்போம்
செம்மை சேர்ந்திட உருவாக்குவோம்

மனித நேயம் கற்பிப்போம்
மதவெறி மாறிட கற்றிடுவோம்
இனிய வற்றைக் கற்றிடுவோம்
இன்பம் பொங்கிட உருவாவோம்!

கருணை யுடனே உருவாவோம்!
கடவுள் அருளால் உருவாவோம்!
வருங்கா லத்தைக் கற்றிடுவோம்
வளமாய் வாழ உருவாக்குவோம்

உலகைப் கற்று உருவாவோம்!
உண்மை நிலைக்க உருவாவோம்!
கலகம் அகல உருவாவோம்!
காலா காலமும் உருவாக்குவோம்

# விடுமுறை உறவை வலுப்படுத்தப்படும்

அருட்சகோதரர் **வி. யேசுராஜ்**
முதலாம் ஆண்டு இறையியல்
புனித பவுல் குருத்துவக் கல்லூரி, திருச்சி

புனித பவுல் இல்லத்திலிருந்து

**முன்னுரை**

உறவு என்பது மனித வாழ்க்கையின் அடித்தளம். ஒரு குழந்தையின் முதல் சிரிப்பும் முதியோரின் கடைசிப் பார்வையும் உறவுகளின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றன. ''மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று'' (தொ.நூல் 2.18) எனக் கூறும் இறைவனின் வார்த்தைகள், உறவின் தேவை இயற்கையானது என உறுதிப்படுத்துகின்றன. ஒரு காலத்தில் மனிதன் இயற்கையோடு வாழ்ந்தான். அந்த இயற்கையின் ஒரு பாகமாகவே உறவுகள் இருந்தன. சிந்திக்க வேண்டியதில்லை, சொல்ல வேண்டியதில்லை உணர்வுகள் தானாகவே சொந்தமாகியிருந்தன. ஒரே வீட்டில் மூத்தோர், இளம்தலைமுறைகள், பிள்ளைகள். அத்தைகள், மாமாக்கள் என அனைவரும் ஒருங்கிணைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். அந்த சூழலில் பாசமும், பகிர்வும், உள்ளத் தூய்மையும் இருந்தன. விருந்துக்காரனுக்காக ஓர் இடம் இருந்தது. ஒருவரின் துன்பம் மற்றொருவரின் பசி போலவே உணரப்பட்டது. அப்போதெல்லாம், நீ என்னைச் சமாளிக்க வேண்டியதில்லை, நான் உன்னோடு இருக்கிறேன் என்பதுதான் உறவின் மொழி. இன்றைய காலத்தில், தொழில்நுட்ப வசதிகள் அதிகரித்ததாலும் உண்மையான உறவுகள் ஒளிந்துவிட்டன. தொடர்புகள் அதிகம் ஆனதாலும், உறவுகள் மௌனமடைந்தன. வார்த்தைகள் வளர்ந்ததாலும் வார்த்தையற்ற பாசம் குலைந்தது. தொழில்நுட்ப வசதிகள் நாம் ஒருவருக்கொருவர் அருகில் இருப்பதைப் போல காட்டினாலும் உண்மையில் நாம் மனமார நெருக்கமின்றி வாழ்ந்து வருகிறோம். வீடுகளில் கூட்டுக் குடும்பம் என்று சொல்லப்படும் வசதிகள் இல்லாமல் தனி வீடுகளும் தனிமைப்பாழ்களும் அதிகமாகியுள்ளன. பணம் சம்பாதிக்கும் துக்கத்தில் உறவுகள் நாம் கவனிக்காத பசுமை மரங்களாக மாறிவிட்டன வீடு இருப்பது போலவும், வசதி நிறைந்த வாழ்க்கை போலவும் தோன்றினாலும், மனதுக்குள் ஓர் ஏக்கம் இருக்கிறது யாராவது உண்மையாய் என்னிடம் பேசுவார்களா? என்ற ஒரு விடியாத கேள்வி இவ்வாறான சூழ்நிலையில், உறவின் மீதான கவனமும், அதன் அழகு மீண்டும் நாம் உணரவேண்டும் என்ற தேடலும் அவசியமாகிறது

**உறவின்றிலை**

மனித வாழ்க்கையில் உறவுகள் என்பது உயிரைப் போலவே முக்கியமானது உறவுகள் இல்லாமல் வாழ்வது செடியை நீர் ஊற்றாமல் வாட வைத்ததைப் போன்றது. இன்றைய உலகில் பலர் மனஅழுத்தம், தனிமை, உளவியல் சோர்வு போன்ற பிரச்சனைகளில் சிக்குகிறார்கள். இவை அனைத்துக்கும் அடிப்படையில் உறவின்மை ஒரு காரணமாக இருக்கிறது. வாழ்க்கையில் பணம், புகழ், பதவி எதுவாக இருந்தாலும், அதனைப் பகிர ஒருவரும் இல்லையெனில் அது வெறுமையாகி விடுகிறது. உறவுகள் இல்லாத வெற்றி ஒரு சுவையற்ற உணவுபோல் ஆகிவிடும். மேலும்,

உறவுகள் கடவுளின் அன்பை உணரச் செய்யும் பாலம். பெற்றோர், நண்பர்கள், பிள்ளைகள் ஆகியோரின் பாசம், கடவுள் நம்மை நேசிக்கிறார் என்பதை நினைவூட்டுகிறது. இவை இல்லாமல் இருந்தால், கடவுளையும் மறந்துவிடும் அபாயம் உண்டு. சமூக ஒழுங்கும் உறவுகளின்மையால் பாதிக்கப்படுகிறது. ஒருவர் தனியாக வாழ ஆரம்பித்தால், சமூகத்திடம் பொறுப்புணர்வு குறைந்து. ஒழுக்கச்சிதைவு ஏற்படலாம். வாழ்வின் இறுதியில், பலர் உடல் நலமுடன் இருந்தாலும் பாசமின்றி, உறவுகளின்றி தனிமையில் இறக்கிறார்கள். இது வாழ்க்கையின் மிகுந்த வேதனைக்கே காரணமாகிறது.

**வாய்ப்பளிக்கும் விடுமுறை**

விடுமுறை என்பது வெறும் நாள்களிலிருந்து ஓய்வெடுக்கும் காலம் அல்ல. அது ஒரு வாழ்வின் சுவாசம், வேலை, கல்வி, பொறுப்புகள் போன்றவற்றால் சோர்ந்த நம்மை மீண்டும் உயிர்ப்பிக்க மட்டும் அல்லாமல், நம்மை நம்முடனும் நம்மை மற்றவர்களுடனும் மீண்டும் இணைக்கும் நேரமாகவும் விடுமுறை அமைகிறது. விடுமுறையில் கிடைக்கும் வாய்ப்பு ஒரு கிழிந்த உறவுத்துணியை ஊசியால் தைத்து ஒட்டுதல் போன்றது. விடுமுறை நேரத்தில் சின்ன சின்ன முயற்சிகள் உறவுகளை வலுப்படுத்தக் கூடியவை உறவுகள் தானாகவே ஆழம் பெறும் என்பதில்லை. அவை நம் செயல்களாலும், நேரமளிப்பதாலும், அர்ப்பணிப்பாலும் வளர்கிறவை உறவுக்கு அர்ப்பணிக்கும் முதல் பரிசு நேரம். விடுமுறையில் குடும்பம், நண்பர்கள், பெரியவர்கள் ஆகியோருடன் அவசியம் நேரம் செலவிட வேண்டும். ஒருவருக்காக பொறுமையாக இருப்பது உறவின் ஊட்டச்சத்தாகும். விடுமுறையில் ஒருவருக்கொருவர் திறந்த மனதுடன் பேசுங்கள். ஒருவருடைய வார்த்தைகளுக்கு இடமளியுங்கள். குழந்தையின் சாதனைக்குக் கைதட்டிப் பாராட்டுங்கள், மனைவியின்/கணவனின் ஆதங்கத்தைக் கேளுங்கள் வாழ்கையில் தவறுகள் நிகழும் ஆனால் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் சக்தி மன்னிப்பில் இருக்கிறது. இயேசு பேதுருவை மன்னித்து மீண்டும் அழைத்தது போல, நாம் உறவுகளை மீண்டும் தொடங்கத் துணிய விடுமுறையை ஒரு வாய்ப்பாக்க வேண்டும்



**முடிவுரை**

மனித வாழ்வின் அழகு உறவுகளில் உள்ளது. உறவுகள் இல்லாமல் வாழ்வது இயற்கைக்கு எதிரானது. விவிலியமும் நம்மை "ஒரே உடலின் உறுப்புகள்" என அழைக்கிறது. உறவுகள் வாழ்க்கையின் அர்த்தம். அவற்றை மதித்து, பேணிப்பணிந்து வாழ்ந்தால்தான் மனித வாழ்க்கை முழுமையாகும். உறவுகள் உறுதியாக இருந்தால், வாழ்வின் நெருக்கடியைக் கூட நாம் சிரித்த முகத்துடன் கடக்கலாம். விடுமுறை என்பது உறவுகளுக்கு இரண்டாவது வாய்ப்பு அந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தும்போது நம் குடும்பம் இறைவனின் அன்பில் நிலைக்கும். உனக்கு அடுத்திருப்பவனை நேசி என்னும் விவிலிய வார்த்தைபோல உறவுகளை நேசித்து வாழ்வதே நம் ஆன்மீக வாழ்வின் அடித்தளம். விடுமுறை உறவை வலுப்படுத்தட்டும். அது வாழ்வை வாழ்வாக மாற்றட்டும்.



# புதிய கல்விக் கொள்கை ஆபத்தா, ஆனந்தமா?

அருள்பணி M.C. ராஜன்

புதிய கல்விக் கொள்கை ஆபத்தா, ஆனந்தமா? தற்போதைய மத்திய அரசு 2014 இல் பொறுப்பேற்றுக் கொண்டபோது புதிய கல்விக் கொள்கைக்கான முயற்சிகளில் வேகமாக இறங்கியது. இலட்சக்கணக்கான இடங்களில் பட்டிதொட்டி எங்கும் கருத்து கேட்பு நடைபெறும் என்று மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் அறிவித்தது. ஆனால் தமிழகத்தில் மதுரை, சென்னை, கோவை ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே கருத்து கேட்பு நடைபெற்றது. ஒரு நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காகத் தயாரிக்கப்படும் எந்த ஒரு கொள்கையும் இரண்டு முக்கியமான அடிப்படைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒன்று, இந்திய அரசியல் சாசன விழுமியங்களை நிறைவேற்றும் திசை வழியில் அது பயணிக்க வேண்டும். இரண்டாவதாக, இந்திய நாட்டின் மக்கள் சந்திக்கும் 21ஆம் நூற்றாண்டுச் சவால்களைச் சந்திக்கத்தக்கதாக அது அமைய வேண்டும். இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமவாய்ப்பு மற்றும் சமவளர்ச்சிக்கு வித்திடும் கூறுகள் இருக்கவேண்டும்.

ஆனால் புதிய கல்விக் கொள்கை மேற்படி இலக்கை நோக்கிய திசை வழியாக இல்லை என்பது இதைப் படிக்கும்போது தெரிகிறது. இது விளைவிக்கும் ஆபத்துக்களைப் பார்த்தோம் என்றால்;

1. மூன்றாம் வகுப்பு முதல் பொதுத் தேர்வுகள் அதன் வழியாகக் குழந்தைகளை வடிகட்டி வெளியே தள்ளுவது.
2. ஒன்பதாம் வகுப்பு முதல் ஆறு மாதத்திற்கு ஒருமுறை பருவத் தேர்வு.
3. எந்தவிதக் கல்லூரியிலும் சேர்ந்து பயில நுழைவுத் தேர்வு.
4. பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் நெறிமுறை நீக்கல்.
5. அனைத்துக் கல்லூரிகளுக்கும் தமக்குத் தாமே பட்டம் கொடுத்துக் கொள்ளும் அங்கீகாரம்.
6. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் சிவப்பு கம்பளம்.
7. சமஸ்கிருதம், இந்தி ஆகியவற்றுக்குத் தேசத்தின் எல்லைக் கோடுகள் வரை நீட்சி அடைய அதிகாரம் அளித்தல்.
8. சமூகநீதியைச் சாய்த்து விடுதல்.
9. குழந்தைகள் மனதில் பழங்கதைகள் பழம் பெருமையைக்கோரி புராணகாலத்தின் குப்பைகளைத் திணித்தல்.
10. கற்றல் செயல்பாடுகளுக்கு உதவி செய்கிறோம் என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட மதம் சார்ந்த தன்னார்வலர்களைக் கொண்டு நிரப்புதல்.


12, 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகள் மனப்பாட அறிவைச் சோதிக்கின்றன. தேர்வு முறைகளை மாற்றவேண்டும் என்று சொல்லிய பின் 3, 5, 8, 10, 12, ஆகிய வகுப்புகளில் பொதுத்தேர்வு திணிக்கப்படுகிறது. அத்தனை தடைகளையும் தாண்டி வந்துவிட்டால் இருக்கவே இருக்கிறது கல்லூரிக்குச் செல்லும்

தகுதியை அறிய நாடு முழுமைக்கானே NTA தேர்வு. இடைநிற்றல் இன்னும் இருக்கிறதே என்று ஒரு பக்கம் நாம் வருந்துகிறோம், மறுபக்கம் பல்வேறு தேர்வுகள் திணிக்கப்படுவது மிகுந்த கவலைக்குரியது.

இதில் உள்ள மோசமான தன்மைகளை பார்க்கிற பொழுது

1. எல்லா மட்டங்களிலும் தகுதி திறமை என்பதை முக்கியபடுத்துவதன் மூலம் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் மிக்க இந்திய சமூகத்தில் இடஒதுக்கீட்டிற்கு இருக்கும் முக்கியத்துவத்தைப் பின் தள்ளுதல்.
2. தனியார் துறைகளில் இட ஒதுக்கீடு தேவையில்லை எனப் பரிந்துரைத்தல்.
3. நமது சமூகம் ஒரு மோசமான சாதியம், தீண்டாமை ஆகியவற்றைக் கடைபிடிக்கும் சமூகமாகவே இன்னும் இருந்து வருகிறது. இன்னொரு பக்கம் மத அடிப்படையில் பெரும்பான்மை மதவாதத்தை வன்முறையுடன் வெளிப்படுத்தும் சமூகமாக உள்ள நிலையில் கல்விச் செயற்பாடுகளில் சமூகம் என்ற கருத்தாக்கத்தை முதன்மைப் படுத்துதல், வலியுறுத்துதல் தீமையான அம்சமாகும்.
4. இந்திய மொழிக் குடும்பங்களில் சமஸ்கிருதத்திற்கு அளிக்கும் முக்கியத்துவத்தைத் திராவிட மொழிக் குடும்பத்திற்கு அளிக்காமை.
5. இந்திய மொழிக் குடும்பங்களில் மாணவர் மற்றும் ஆசிரியர் சங்கங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமை.
6. கல்வி நிறுவனங்களில் தலித் மாணவர்களின், பழங்குடியின மாணவ மாணவிகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு பற்றிப் பேசாமை

எனவே ஒரே இந்தியா, ஒரே கலாச்சாரம், ஒரே மதம், ஒரே வரி என்கிற பாதையில் பயணிக்கும் இன்னொரு மைல்கல்தான் இந்த தேசிய கல்விக் கொள்கை. எனவே மூன்றாம் வகுப்பு முதல் தேர்வுகளை நடத்தி ஒவ்வொரு நிலையிலும் “எங்களுக்குப் படிப்பு வரவில்லை. நாங்கள் கற்கத் தகுதியற்றவர்கள்” என்று தங்களைத் தாங்களே ஒத்துக் கொள்ள வைத்து, பள்ளியை விட்டு விரட்டியடிக்கும் வேலையைத் தேசிய கல்விக் கொள்கை செய்து வருவது, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவமாணவியரின் எதிர்காலத்திற்கு ஆபத்தானதாகும்.




# புத்தகம்

**தலை குனிந்து என்னை பார்**
**தலை நிமிர்ந்து உன்னை**
**நடக்க வைக்கிறேன்..!!**





# புனித தேவசாகயம் பற்றி முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்...

**ஓலைக்கோடு ஜாண்**

**இறைமடியில் துயில் கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித தேவசகாயம் பற்றி இலத்தின் மொழியில் வெளியிட்ட புனிதர் நிலை அறிவிப்பாணையின் தமிழ் மொழியாக்கம்.**

மொழியாக்கம் செய்தவர்:

**அருள் முனைவர்: எ. ஜான் குழந்தை**

தொகுப்பு: **ஒலக்கோடு ஜான்**

இறைமடியில் துயில் கொள்ளும் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருச்சபைக்குச் செய்துள்ள சாதனைகள், அன்புப் புரட்சிகள் ஏராளம் ஏராளம். அவர் ஒரு மனிதநேய சமூகப் புரட்சியாளர். உள்நாட்டு வெளிநாட்டு, போர்களால், சமூகப் புறக்கணிப்பு களால் சிக்கித் தவித்த விளிம்பு நிலை மக்களின் கண்ணீரைத் துடைக்க அரும் பாடுபட்டவர். மரபுகளை மீறி இறை இயேசுவின் சாட்சியாய் எளிய வாழ்வு வாழ்ந்தவர். நாளைய புனிதர் எனப் போற்றப்படக்கூடிய அளவுக்கு உலக மக்களின் அன்பையும் வணக்கத்தையும் பெற்றவர். அவர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள சாந்தா மார்த்தா பேராலயத்தில் நம் புனிதர் தேவசகாயத்தின் சுரூபம் வைக்கப்பட்டுள்ளது நமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த சுரூபம் குமரி மண்ணிலிருந்து கொண்டு செல்லப்பட்டதாகும். லத்தின் மொழியில் புனித தேவசகாயம் பற்றி வெளியிடப்பட்ட புனிதர் பட்ட அறிவிப்பாணையின் தமிழாக்கம் இதோ:

பிரான்சிஸ், ஆயர், கடவுளின் ஊழியர்க்கு ஊழியருமாகிய பிரான்சிஸ், என்றும் நினைவில் நிற்க அறிவிக்கை செய்வது:

“என் நண்பர்களாகிய உங்களுக்கு நான் சொல்கிறேன்: உடலைக் கொல்வதையன்றி வேறு எதுவும் செய்ய இயலாதவர்களுக்கு அஞ்ச வேண்டாம்” (லூக்கா 12:4). ஆண்டவரின் இந்த வார்த்தைகளை ஆழமாக அனுபவித்தறிந்தவர் முத்திப்பேறுபெற்ற தேவசகாயம். தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளின் முன் அவர் தம் நம்பிக்கையில் ஒருபோதும் தடுமாற்றத்திற்கு ஆளாகவில்லை.

1712 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள், தென்மேற்கு இந்தியாவில் திருவிதாங்கூர் அரசின் நட்டாலம் என்னும் ஊரில் புகழ்பெற்ற இந்துக் குடும்பம் ஒன்றில் பிறந்தார். நீலம் என்றும் நீலகண்டன் என்றும் அழைக்கப்பட்டார். முறையான கல்வியும், உயர்தரமான பண்பாட்டுப் பயிற்சியும் தனிப்பட்ட முறையில் பெற்றார். அவரது குலத்தைச் சேர்ந்த ஆடவர் மன்னரின் படையில் சேர்ந்து போரிட்டு வந்தனர். இளைஞரான நீலகண்டன் இதோடு தற்காப்புக் கலைகளிலும், கல்வியிலும் சிறப்புற்று விளங்கியதோடு, அவற்றைப் பிறர்க்குக் கற்றுத் தருபவராயும் இருந்தார். மன்னரின் படையில் சேர்ந்து, தம் ஆளுமையின் சிறப்பாலும், தமது செயல் திறமையினாலும் அரச அலுவலில் ஓர் உயர்ந்த நிலையை அடைந்து, அரசப் படைகளின் கருவூலங்களின் நிர்வாகியாகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்து மதத்தின்

தொன்மையான மரபுகளை ஆர்வத்துடன் கற்றுக்கொள்பவராக நீலகண்டன் தெய்வங்கள் மற்றும் தம் மதம் சார்ந்த பக்தியில் தவறாமல் வழிபட்டு வந்தார்.

1741ஆம் ஆண்டு, டச்சுப் படை மலபார் பகுதியில் திருவிதாங்கூர் அரசின் ஒரு பகுதியை ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டு அதற்காகத் தாக்குதலில் ஈடுபட்டது. போர் மூண்டது. டச்சுப் படைகள் சிதறடிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டன. பல டச்சுப் படைவீரர்கள் கைது செய்யப்பட்டனர். படைத்தளபதியான கத்தோலிக்கர் யுஸ்தாகியுஸ் டிலனாய் அவர்களுள் ஒருவராக இருந்தார். அவர் தம் அரசின் மேம்பாட்டுக்காக உழைக்க ஆர்வம் கொண்டவராய் இருந்தார்.

டச்சுப் படையின் தளபதியான டிலனாய் படைவீரர்கள் விடயத்தில் திறமைமிக்கவராய் இருப்பதை அறிந்த திருவிதாங்கூர் மன்னர், அவரைச் சேர்த்துக்கொண்டு, தமது படையின் தளபதியாக நியமித்தார்.

முத்திப் பேறு பெற்ற நீலகண்டன் இந்த மனிதர் டிலனாயுடன் மிகவும் நெருங்கிப் பழகலானார். நாளடைவில் நமது அருளாளர் கிறித்தவ மதத்தினால் ஈர்க்கப்பட்டார். கிறித்துவைப் பின்பற்றவும், ஒரு கிறித்தவராக ஆகிடவும் ஆசை கொண்டு தம் ஆசையை வெளிப்படுத்தினார். மன்னர் மார்த்தாண்டவர்மா கிறிஸ்தவ நம்பிக்கைக்கு மக்கள் மாறுவதைக் குறிப்பாக, உயர்நிலை சமூகங்களில் இருந்தவர்கள் அப்படி மாறுவதை வெறுத்து வந்தார். நற்செய்தி மார்க்கத்தில் சேர்ந்தவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளைத் தமக்குள் உணர்ந்த டிலனாய் கிறித்தவ நம்பிக்கையைத் தழுவிடத் தன் நண்பர் கொண்டிருந்த வேகத்தினைப் பார்த்துத் தயங்கினார். எனினும், தம் வழிகாட்டுதலையே அவரை (நீலகண்டனை) டிலனாய், அரசரின் கோபத்தைத் தவிர்க்கும் நோக்குடன், திருவிதாங்கூர் அரசின் எல்லைக்கு வெளியே சேசுசபை நற்செய்திப் பணியாளராக இருந்த தந்தை யோவான்னெஸ் பாப்டிஸ்ட் புத்தாரிடம் அனுப்பினார். அவர் அவருக்கு 1745ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் நாள் திருமுழுக்கு வழங்கி, தேவசகாயம் என்னும் பெயரை அவருக்குத் தந்தார். இப்பெயர் விவிலியத்தில் வரும் இலாசரஸ் என்னும் பெயரின் தமிழாக்கம் ஆகும்.

திருமுழுக்குக்குப் பின் நம் அருளாளர் இயேசு கிறித்துவின்மீது நம்பிக்கையைப் பரப்பிட, பெரியதோர் நற்செய்தி அறிவிப்புப் பணியைத் தொடங்கினார். அவரின் மனைவி பார்கவியம்மாவும் திருமுழுக்கின் அருள் அடையாளத்தைப் பெற்றுக்கொண்டு தெரேசா என்னும் பொருள்படும் ஞானப்பூ என்னும் பெயர் சூட்டப் பெற்றார்.


தேவசகாயத்தின் மதமாற்றம் நாட்டுத் துரோகம் எனவும் அரசிற்கு ஆபத்தானது எனவும் கருதப்பட்டு வந்தது. பிராமணர்கள் தங்களால் புனையப் பெற்ற குற்றச்சாட்டுகளைக் கொண்டு மன்னரிடம் அவரைப் பற்றி முறையீடு செய்தனர். அரசு முதன்மையாகக் கருதிய இந்துக்களின் தெய்வங்களை வணங்க மறுத்ததும் திருவிழாக்களில் பங்கெடுக்க மறுத்ததும் முதன்மைக் குற்றச்சாட்டு ஆகும். இது அதிகாரிகளுக்கு எரிச்சல் ஊட்டும் அளவுக்கு இருந்தது. மக்களிடையே நிலவிய ஏற்றத்தாழ்வுகள் வெல்லப்பட்டு, தாழ்த்தப் பட்டவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்டவர்களோடு நல்லுறவைப் போதித்தார். இதை எல்லாம் அவர்களால் கொஞ்சமும் சகித்துக்கொள்ள இயலவில்லை. இறுதியாக, ஒரு புதிய ஆலயம் கட்டுவதற்கு மரங்கள் வழங்கியதன் மூலம் கிறித்தவர்களுக்கு, குறிப்பாக தந்தை புட்டாரிக்கு உதவி செய்துவிட்டதாகக் குற்றம் சாட்டினர்.

அரண்மனை அதிகாரிகளின் வற்புறுத்தலினால் முத்திப்பேறு பெற்ற

தேவசகாயம் கைது செய்யப்பட அரசர் ஆணையிட, 1749ஆம் ஆண்டு பெப்ரவரி 23 அன்று சிறையில் அடைக்கப்பட்டார். தமது புதிய நம்பிக்கையைக் கைவிடவும், இந்து சமயத்தவர் முறைமைகளைப் பின்பற்றவும் மன்னர் அவரைக் கோரினார். இல்லாவிட்டால் தண்டிக்கப்படுவார் என்றும் தெரிவித்தார். மன்னனும் தலைவர்களும் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்று, முத்திப்பேறு பெற்ற தேவசகாயம் தமது புதிய நம்பிக்கையை உறுதியாகப் பற்றிக்கொண்டார். “நான் கிறித்துவை மறுதலிக்க மாட்டேன்” என்றார்.

அவர் தம் கிறித்தவ நம்பிக்கையைக் கைவிடச் செய்ய அவர்கள் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியுற, அவரை எல்லார் முன்னும் தொடர்ந்து துன்புறுத்த ஆணையிட்டார் அரசர். அதன் நோக்கம் என்னவென்றால், கத்தோலிக்க நம்பிக்கைக்கு மாற எண்ணம் கொண்டவர்களுக்கு அது ஓர் எச்சரிக்கையாக இருக்கத்தான். தேவசகாயத்தின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி கிறித்தவர் பலரும் தங்கள் முடிவில் உறுதியாய் இருந்தார்கள். ஏனைய கிறிஸ்தவர்கள் பலர் அந்த அரசைவிட்டு வெளியேறினர், தம் நம்பிக்கையைவிட்டு விலகிய சிலரும் உண்டு. அரசு அமைச்சர்களும் படை வீரர்களும் அவரை வதைசெய்ய மேலும் பல கொடிய முறைகளை வடிவமைத்தனர். இவ்வாறு அந்தச் சித்திரவதை தொடர்ந்து கம்புகளைக் கொண்டும் முட்களாலும் நடந்தது. அடிகளால் உடல் வேதனைகளும் அதிகரித்தன. காயங்களில் வற்றல் பொடியைப் பூசினார்கள். தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் மத்தியில் நிற்க வற்புறுத்தினர். பல காத தூரம் கொளுத்தும் வெயிலில் அவரை நடக்க வைத்தனர். கைகளையும் கால்களையும் சங்கிலிகளால் பிணைத்து வைத்தனர். புலியூர்க்குறிச்சியில் ஒரு பாறையின்மீது இருந்தபோது அவருக்குத் தாகமாய் இருந்தது. ஆனால் ஒருதுளி தண்ணீர்கூட குடிக்க அவருக்கு அனுமதி மறுத்துவிட்டனர். எனவே அவர் பாறையின்மீது மண்டியிட்டு இறை வேண்டல் செய்தார். அந்தப் பாறையிலிருந்து தண்ணீர் பீறிட்டது. அந்தத் தண்ணீரால் அவரது தாகத்தைத் தணிக்க முடிந்தது. அதிகாரிகள் அவரது உடல் உபாதைகளை மேலும் அதிகரித்தனர். அவரைப் பெருவிளை என்ற இடத்திற்கு அழைத்துச் சென்று வதைப்போரிடம் கையளித்தனர்.

தொடரும்...





# அமைதியின்றி அமையாது உலகு

சேவியர்

சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர்! எனும் அறைகூவலே இன்றைய தினம் நமக்கு மிகவும் தேவையான ஒன்றாக இருக்கிறது. போர் என்பதை ஹீரோயிசம் என்றும், சதுரங்க விளையாட்டு போல அடுத்தவரை அழித்து முன்னேறுவதே வெற்றி என்றும் இதயங்களில் சிந்தனைகள் கல்வெட்டு போல பதியமிடப்படுகின்றன. வரலாற்றில் போர்கள் சுமந்து வந்த வடுக்கள் கணக்கற்றவை. போர்களின் குரூரத்தை நேரில் கண்டவர்கள் அதை ஒருபோதும் ஆதரிப்பதில்லை.

இன்றைக்கு யுத்தங்கள் எல்லைகளில் ஆரம்பிக்கின்றன, ஆனால் நம் வீட்டுக் கொல்லையில் தான் நெருப்பு வைக்கின்றன. சமூக வலைத்தளங்கள் ஊற்றிச் செல்லும் வெறுப்பின் நெருப்புகள் நமது சமாதானத்தின் மீது சம்மட்டி அடியாய் விழுகிறது.

உயிரைக் கொல்லும் ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டும், வெறும் உயிரை மட்டும் கொல்வதில்லை. ஒரு வாய்ப்பைக் கொல்கிறது. சமூகத்தின் ஒரு பிரதிநிதியைக் கொல்கிறது. போர்கள் நம்மிடமிருந்து ஆசிரியர்களை, கலைஞர்களை, குழந்தைகளை, பெற்றோரை என தொடர்ந்து அபகரித்துக் கொண்டே இருக்கிறது. போர்களில் இராணுவ வீரர்கள் மட்டும் சாவதில்லை, அல்லது தீவிரவாதிகள் மட்டும் அழிவதில்லை. அது அப்பாவிகளின் கனவுகளைக் குழி தோண்டிப் புதைக்கிறது என்பதையே காசா நமக்குக் கற்றுத் தருகிறது.

போர் உடல்களைப் புதைக்கிறது! சமாதானம் எதிர்காலத்தை உயிர்த்தெழச் செய்கிறது. போர்கள் வாழையடி வாழைகள். ஒன்றன் பின் ஒன்று முளைத்துக் கொண்டே இருக்கும். எப்போதுமே நெருப்பு நெருப்பையும், வன்முறை வன்முறையையும் அணைப்பதில்லை.

எல்லாப் போர்களும் நிர்ப்பந்தத்தினாலோ, வேறு வழியில்லாமலோ ஆரம்பிப்பதில்லை. பல போர்கள் அரசியல் விளையாட்டுகளாகவே இருக்கின்றன. அதன் ஆணி வேர் என்ன என்பதை சமூகம் அறிய முற்படுவதில்லை. அறிவுத் தேடலை விட உணர்ச்சித் தேடலே இத்தகைய போர்களில் முதன்மைப் படுத்தப்படுகிறது.

மதில் சுவரைக் கட்டியெழுப்புபவர்கள் அதிகாரத்தை கையகப்படுத்த நினைக்கிறார்கள். அப்பத்தைப் பகிர்ந்து கொடுப்பவர்களே சமாதானத்தின் தூதுவர்களாய் இருக்கிறார்கள்.

அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர் என்றார் இயேசு

சமாதானம் என்பது பிரச்சினைகளற்ற சூழல் அல்ல எந்த பிரச்சினை எழுந்தாலும் அதை அன்புடனும், சமாதானத்துடனும், கனிவுடனும், மனித நேயத்துடனும் அணுகுவதே. இயேசு பயணித்த கடல் கொந்தளித்தது. இயேசு கடலைத் தவிர்க்கவில்லை, தணித்தார். சிலவற்றை நாம் தவிர்க்க முடியாது, ஆனால் அவற்றைத் தணிக்க முடியும். உண்மையிலேயே இந்த சூழல் தேவையா? இது மனுக்குலத்தின் மாண்புக்கு உகந்ததா எனும் கேள்வியை நாம் தொடர்ந்து எழுப்ப வேண்டும்.

போர்கள் வெறும் உயிர்களை மட்டும் கொல்வதில்லை. அவை வரலாற்றைத் அழிக்கின்றன. அதன் மேல் குருதியினால் வர்ணம் பூசுகின்றன. அவை பல கலாச்சாரங்களை உடைத்து சுக்கு நூறாக்குன்றன. நூலகங்கள், மியூசியங்கள், வரலாற்றுப் பதிவுகள், நம் தனித்துவ அடையாளங்கள் என எதையும் அது

ஆராய்ந்து பார்த்து அழிப்பதில்லை. நெருப்பின் கரங்களில் கரன்சியும் குப்பையும் ஒன்றே! போர்கள் வலிமையின் அடையாளங்களல்ல, அவை வலியின் அவமானங்கள்.

பல நாடுகளில் போர்கள் விலகிய பின்னும் குழந்தைகள், சிறார், பெரியவர்கள் என பெரும்பாலானோர் மன அழுத்தம், உளைச்சல் போன்றவற்றில் விழுந்து மிச்ச வாழ்க்கையை நரக வாழ்க்கையாய் மாற்றி வருகின்றனர். அவர்களுடைய கனவுகளுக்குள் விழுந்த கண்ணி வெடியினால், நிஜங்களுக்குள் அவர்கள் முடமாகி விடுகின்றனர்.

உலகம் ஏவுகணைகளை வாங்குவதற்குக் காட்டும் அக்கறையை, ஏழைகளுக்கு ஒரு கவளம் சோறு கொடுப்பதில் காட்டுகிறதா என்பதே மில்லியன் டாலர் கேள்வி. போர்கள் உலகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பை உடைத்து எறிகின்றன. நீயா, நானா எனும் போர்கள் எப்போதும் இருதரப்புக்குமே வெற்றியின்றியே முடிகின்றன. ஏனெனில் போரில் வெற்றி தோல்வி என்பதே இல்லை! போர் என்பதே தோல்வி தான்.

யூதனென்றும் இல்லை, கிரேக்கனென்றும் இல்லை ஆணென்றும் இல்லை பெண்ணென்றும் இல்லை அனைவரும் இயேசுவில் ஒன்றாய் இருக்க வேண்டும் என்பதே கிறிஸ்தவம் போதிக்கும் அமைதி. அதைக் கிறிஸ்தவமே பின்பற்றியதில்லை என்பதையே வரலாறு படம்பிடித்துக் காட்டுகிறது. சிலுவைப் போர்கள் நமது வரலாற்றின் அழியாத கறைகள் அல்லவா?

இன்றைய உலகின் தேவை மன்னிப்பே! அதுவே உலகத்தின் ஆகப் பெரிய தேவை. தீமைக்குத் தீமை செய்யாதீர்கள், அனைவருடனும் சமாதானமாய் வாழுங்கள் என்கிறது ரோமர் நூல். பழிவாங்குதல் ஒரு தொடர்கதை. அது எப்போதுமே ஒரு சங்கிலித் தொடராய் நீண்டு கொண்டே இருக்கும். ஒரு வட்டமாய் நம்மை மீண்டும் மீண்டும் தொட்டுக் கொண்டே இருக்கும்.

இயேசு சிலுவையில் கூட மன்னித்தார். எதிரே இருப்பவர்கள் தவறு செய்யாதவர்கள் அல்ல. மிகப்பெரிய தவறு செய்தவர்கள் அவர்களை மன்னித்தார்! தவறு செய்யாதவர் களை மன்னிக்கத் தேவை யில்லையே! இனிமேல் பாவம் செய்யாதே எனும் வார்த்தையில் இயேசு பழைய பாவங்களில் புதைந்து கிடப்பதல்ல, புதிய வாழ்க்கைக்குள் எழுந்து நடப்பதே தேவை என்பதையே நமக்குப் புரிய வைக்கிறார்.

இந்தக் காலகட்டத்தில் உலக அமைதிக்கான அறைகூவலை விடுக்க வேண்டியதும், அதற்காய் உழைக்க வேண்டியதும் நம் கடமையாகும். நமது திருத்தந்தையர்கள் தொடர்ந்து அதையே வலியுறுத்தி வருகிறார்கள்.

**சில எளிய சிந்தனைகளை நாம் மனதில் கொள்வோம்.**

1. சமூக வலைத்தளங்களில் எந்த விதத்திலும் வெறுப்பையோ, வன்முறையையோ தூண்டும் எதையும் பதிவு செய்யாதிருப்போம்.
2. சமூகத்தில் அன்பின் தேவையையும், மனிதத்தின் தேவையையும், அமைதியின் தேவையையும் விதைப்போம். அதைக் குடும்பங்களில் இடையறாது செய்வோம்.
3. எந்த ஒரு செய்தியையோ, சிந்தனையையோ பகிரும் முன் அது உண்மையா? அது தேவையானதா? அது அமைதியை ஊக்குவிக்குமா எனும் கேள்விகளைக் கேட்டுச் செயல்படுவோம்
4. உன்னைப் போல் அயலானையும் நேசி என்றார் இயேசு. அதற்கு சாதி, மத, இன, மொழி எல்லைகளை அவர் வகுக்கவில்லை. அந்த அன்பையே நாம் சுமந்து செல்வோம்.
5. உலக அமைதிக்காவும், உலக மக்களின் நலனுக்காகவும் தொடர்ந்து செபிப்போம். இறைவனின் ஆற்றல் சூழல்களை மாற்றும்.
6. சமூக அமைதிக்காகவும், நீதிக்காகவும், நல்லிணக்கத்துக்காகவும் போராடுவோருக்குத் துணிச்சலாய்த் துணை நிற்போம்.
7. வாழ்க்கையில் நம்மை வழிநடத்துபவர்கள் சமாதான விரும்பிகளாய் இருக்கட்டும். வன்முறையின் விதைகளை விதைக்கும் மனிதர்களை நாம் கவனமாய்த் தவிர்ப்போம். அது திருச்சபைகளில் ஆனாலும் சரி, சமூகத்தில் ஆனாலும் சரி.

இந்தச் சிந்தனைகளை மனதில் கொள்வோம். அன்பின் உலகைக் கட்டியெழுப்புவோம். ஏனெனில் அன்பின்றி அமையாது உலகு.

# விவிலிய வரலாறு போற்றும் தீர்ப்புகள்

**D.M. ஜேம்ஸ் மார்ட்டின்**

**I. மன்னர் சாலமோனின் ஞான மிகு தீரப்பு.**

மன்னர் சாலமோனின் நீதிமன்றத்தில் விசித்திரமான வழக்கு ஒன்று வந்தது. உயிருடன் இருக்கும் ஒரு பச்சிளம் குழந்தையை இரண்டு தாய்மார்கள் உரிமை கொண்டாடினர். இருவருடைய வாதங்களை கேட்டதும் மன்னர் காவலரை அழைத்தார். ‘‘உயிருடன் இருக்கும் இக்குழந்தையை இரண்டாக வெட்டி இருவருக்கும் கொடு,’’ என்று ஆணையிட்டார். காவலன் வந்தான். குழந்தையைத் தூக்கினான். ஒரு கையில் குழந்தை. மறு கையில் ஓங்கிய வாள். குழந்தை கதறியது. குழந்தையின் அழுகுரலைக் கேட்ட ஒரு தாய் மன்னர் காலடியில் விழுந்தாள். கதறினாள். ‘‘மன்னா குழந்தையை வெட்ட வேண்டாம். அவளிடமே கொடுத்து விடுங்கள். குழந்தை அவளிடம் உயிருடன் இருப்பதைப் பார்த்தாவது நான் பரசமடைவேன்,’’ என்று கண்ணீரோடு கதறினாள். மற்ற தாயோ, ‘‘உனக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம் குழந்தையை இரண்டாக வெட்டுங்கள்,’’ என்றாள்.

உடனே மன்னர், ‘‘குழந்தையை வெட்ட வேண்டாம். முதல் தாயிடமே குழந்தையைக் கொடுங்கள். அவள்தான் குழந்தையின் உண்மையான தாய், என்றார். தான் பெற்ற குழந்தையை எந்த ஒரு தாயும் வெட்ட ஒரு நாளும் சம்மதிக்கமாட்டாள்,’’ என்ற மனதத்துவத்தை உணர்ந்தார் மன்னர். ஒரு சில நிமிடங்களில் தீரப்பைக் கூறி விட்டார். இதைத்தான் Ethical Justice என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள். இம்மாதிரி ஒரு தீரப்பு இதற்கு முந்தியோ, அல்லது பிந்தியோ இது நாள் வரைக்கும் உலகில் வந்ததில்லை. உலகெங்கிலும் இன்றளவும் இத்தீர்ப்பு போற்றப்பட்டு வருகிறது.

**II. தீர்ப்புக்கு ஒரு தானியேல்.**

பாபிலோனில் வாழ்ந்த சூசன்னா ஆண்டவருக்கு அஞ்சி வாழ்ந்தவள். பேரழகி. பெரும் செல்வந்தரின் மனைவி. சூசன்னா பகல் வேளையில் தனது தோட்டத்தில் உலாவுவது வழக்கம். இதைக் கண்ணுற்ற இரு நடுவர்கள் இவள் அழகில் மயங்கி இவளைக் காமுற்றனர். தங்கள் காமப் பசியைப் போக்க சந்தர்ப்பம் தேடிக் காத்திருந்தனர்.

ஒரு நாள் பகல் வேளையில் குளிப்பதற்காக சூசன்னா தோட்டத்திற்கு வந்தாள். இரு நடுவர்களும் தோட்டத்தில் மறைந்திருந்தனர். இருவரும் சூசன்னாவிடம் ஓடோடி வந்து ‘‘இங்கு நம் மூவரைத்தவிர வேறு யாருமில்லை. எங்கள் ஆசைக்கு இணங்கி விடு. இல்லையேல் நீ வேறு ஒரு வாலிபனுடன் தோட்டத்தில் பாவம் செய்தாய் என்று மக்கள் மன்றத்தில் முறையிடுவோம்,’’ என்று பயமுறத்தினர். ஆனால் அவர்களின் காம இச்சைக்கு சூசன்னா இணங்கவில்லை. இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்வதை விடச் சாவதே மேல் என்று அவர்களின் இச்சைக்கு இணங்க மறுத்து விட்டாள். உடனே இருவரும் மக்கள் மன்றத்தில், ‘‘சூசன்னா தோட்டத்தில் ஒரு வாலிபனுடன் உடல் உறவு கொண்டதை எங்கள் கண்களால் பார்த்தோம். அந்த வாலிபனைப் பிடிக்க முயன்றோம். அவன் தப்பி ஓடிவிட்டான்..’’ என்று அவன் தலையில் கை வைத்து சத்தியம் செய்து சாட்சியம் கூறினர். இருவரும் நடுவர்களாகவும், மூப்பர்களாகவும் இருந்ததால்

அவர்களின் வாய்மொழி சாட்சியத்தை ஏற்று சூசன்னாவுக்கு மரண தண்டனை விதித்தது மக்கள் நீதிமன்றம்.

சூசன்னா உரத்த குரலில் இறைவனை வேண்டினாள். அவளது அபயக்குரல் இறைவன் சன்னிதானத்தை எட்டியது. தூய ஆவியார் அவளது அழுகுரலை அந்தக் கூட்டத்திலிருந்த தானியேல் இறைவாக்கினரின் இதயத்தில் ஒலிக்கச் செய்தார். உடனே தானியேல் எழுந்து "இவளுடைய இரத்தப் பழியில் எனக்குப் பங்கில்லை" என்று உரக்கக் கத்தினார். மக்கள் கூட்டம் அவரைப் பார்த்து விலை வழக்கை சரியாக ஆராயமாலும், உண்மையைக் கண்டறியாமலும் அவரசமாக சூசன்னாவுக்கு அறியாயத் தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது. இம்மனிதர்கள் இருவரும் சூசன்னாவுக்கு எதிராகப் பொய் சாட்சி சொல்லியிருக்கிறார்கள். என்று கூச்சலிட்டார். மக்கள் நீதிமன்றம் வழக்கை அவரையே மறு விசாரணை செய்யப் பணித்தது.

தானியேல் இரு சாட்சிகளையும் அழைத்து தனித்தனியே வெவ்வேறு இடங்களில் இருக்கச் செய்தார். முதல் சாட்சியை அழைத்து, "எந்த மரத்தின் கீழ் சூசன்னா பாவம் செய்ததைக் கண்டீர்," என்று கேட்க அவர் "விளா மரத்தடியில்" என்றார். அவரை அனுப்பி விட்டு மற்றவரை வரவழைத்து கேட்க, அவர் "கருவாலி மரத்தடியில்" என்றார். இருவரின் வாய்மொழி சாட்சியங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு முரண்பாடாக இருந்ததால் அவர்கள் சொன்ன வாய் மொழி சாட்சியம் பொய் என்று நிரூபித்தார், தானியேல், மக்கள் நீதிமன்றம் சூசன்னாவை விடுதலை செய்து, பொய் சாட்சி சொன்ன இரு நடுவர்களுக்கும் மோசே சட்டப்படி மரண தண்டனை விதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### III. இயேசுவின் மனித நேய அற்புதமான தீர்ப்பு,

விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிப்பட்ட பெண் ஒருத்தியை மறைநூல் வல்லுநர்களும், பரிசேயர்களும் கொண்டு வந்து இயேசுவின் முன் நிறுத்தினர். "மோசே சட்டப்படி இவள் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும். நீர் என்ன செல்கிறீர்?" என்று கேட்டனர். "உங்களில் பாவம் இல்லாதவன் இவள் மீது முதலில் கல் எறியட்டும்." இதுதான் இயேசுவின் பதில். இதைக் கேட்டதும் மூத்தவர் தொடங்கி ஒவ்வொருவராக அனைவரும் போய் விட்டனர். "இனி பாவம் செய்யாதே போ." இது தான் இயேசுவின் தீரப்பு.

விபச்சார வழக்கிற்கு ஓர் ஆணும் ஒரு பெண்ணும் வேண்டும். ஆனால் இவர்கள் ஆணை விட்டு விட்டுப் பெண்ணை மட்டும் கொண்டு வந்ததிலிருந்தே, தன்னிடம் குற்றம் காணவே இவர்கள் வந்துள்ளனர் என்பதை இயேசு கண்டுகொண்டர். விவிலியப்படி இயேசுவின் தீர்ப்புகள் அனைத்துமே மனித நேய அமைப்பில் அற்புதமாகக் கூறப்பட்டவை. தீயோர் தண்டிக்கப்பட வேண்டும் என்பது இறைவனின் விருப்பமல்ல. தீயோர் தீய வழியிலிருந்து திருந்தி நல்வழிக்கு வர வேண்டும் என்பதே இறைவனின் விருப்பும் என்கிறார் எசாயா இறைவாக்கினர். ஒருவனைத் தண்டிப்பதால் மட்டும் அவன் திருந்தப்போவல்லை. மன்னிப்புதான் மனிதனை மனிதனாக்கும், புனிதனாக்கும் என்பதே இயேசுவின் அறிவுரை. தன்னை மறுதலித்த பேதுருவையே மன்னித்தார். சிலுவையில் தொங்கி மனம் மாறிய நல்ல கள்வனை மன்னித்து இறையாட்சிக்கே உட்படுத்தினார் இயேசு.

திருடராய் பார்த்து திருந்தவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. தனிமனிதன் திருந்தி விட்டால் சிறைச்சாலைகள் தேவையில்லையல்லவா? இயேசுவின் இறையாட்சி உலகம் முழுவதும் ஏற்பட்டால் மட்டுமே இவ்வுலகம் அமைதி பூங்காவாக மாறும்.

### IV. ஆளுநர் பிலாத்துவின் நியாயமற்ற தீர்ப்பு

யூத மூப்பர்களும் தலைமைக்குருக்களும் இயேசுவை பிடித்து விசாரணைக்காக ஆளுநர் பிலாத்துவின் முன் நிறுத்தினர். சில பொய்யான குற்றச் சாட்டுகளைக் கூறி அவருக்குச் சிலுவைச்சாவு வழங்கும்படி வற்புறுத்தினர். பிலாத்து கல்தளம் என்ற நீறி இருக்கையில் அமர்ந்திருந்து வழக்கை விசாரணை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது பிலாத்துவின் மனைவி, "அந்த நீதிமான் (இயேசு) விஷயத்தில் நீர் தலையிட வேண்டாம். அவர் பொருட்டு இன்று

இரவில் மிகவும் துன்புற்றேன்,'' என்று ஒரு ஆள் மூலம் சொல்லியனுப்பியதால் அதனால் கலக்கமுற்ற ஆளுநர் பிலாத்து அவரை விடுதலை செய்ய வழி தேடினான். பாஸ்கா விழாவின்போது ஒரு கைதியை விடுதலை செய்வது வழக்கம் இயேசுவை விடுதலை செய்ய விரும்பிய பிலாத்து, ''இயேசுவையா, பரபாசையா?'' யாரை விடுதலை செய்ய வேண்டுமென்று கூடியிருந்த மக்களிடம் கேட்டான். இந்த பரபாஸ் பல கொள்ளை, கொலை வழக்குகளில் சம்மந்தப்பட்டவன். மக்கள் கூட்டம், மூப்பர்கள், தலைமைக் குருக்களின் துண்டுதலால் ''பரபாசை விடுதலை செய், ஏசுவை சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டும்'' என்று கூச்சலிட்டது. மேலும், நீர் ஏசுவை விடுதலை செய்தால், ''மன்னர் சீசரின் நண்பனாக இருக்க முடியாது தன்னையே அரசானாக்கிக் கொள்ளும் எவரும் சீசரின் எதிரி,'' என்று கூச்சலிட்டது. விடுதலை செய்தால் தன் பதவி பறிபோய்விடும் என்று மன்னர் சீசருக்கு பயந்து, மக்கள் கூட்டத்திற்குப் பணிந்து இயேசுவைச் சிலுவைச் சாவிற்குத் தீர்ப்பளித்தான். அதற்கு முன் மக்கள் முன்னிலையில் இவனது இரத்தத்தில் நான் குற்றமற்றவன் எனக்கூறி தண்ணீரில் கை கழுவினான் மக்கள் கூட்டமோ. ''இவன் இரத்தம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கட்டும்,'' என்று கூச்சலிட்டது. பின்னாட்களில் யூதர்கள் நாடிழந்து, நாடோடிகளாக உலகம் முழுவதும் குடிபோனதற்கு நகரக்கு இயேசுவின் இரத்தப்பழிகள் என்று உலகம் பேசியது.

நீதிமன்ற இருக்கையில் அமரும் அத்தனை நீதிபதிகளும் ''விருப்பு வெறுப்பின்றி,'' நீதி வழங்குவேன் என்ற உறுதி மொழியை எடுத்துதான் அமர்கிறார்கள். எல்லோருமே அதன் படி நடக்கிறார்கள் என்று கூற முடியுமா? ஆட்சியாளர்களிடம் சலுகைகளை எதிர்பார்த்து, அல்லது பதவி பறிபோய்விடுமோ என்று பயந்து பிலாத்துவைப்போல அநியாயத் தீர்ப்பு வழங்கும் நீதிபதிகள் இல்லை என்று கூற முடியுமா?

# கன்னியாகுமரி மாவட்டத்தின் கல்வி வரலாறு

**குமரி ஆதவன்**

இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் கி,பி 9-ஆம் நூற்றாண்டுவரை வேணாடு என்ற பெயருடன் சேர நாட்டோடு இருந்தது. சேர நாடு சிதைந்து சமஸ்தானங்கள் ஆனபோது, திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தது. திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் பெரும்பாலான கிராமங்களில் ஆசான்மார் நடத்திய குருகுலக் கல்வி நிலையங்கள், புலவர்கள் நடத்திய திண்ணைப் பள்ளிகள் சங்ககாலம் முதல் 18-ஆம் நூற்றாண்டு இறுதிவரை இருந்ததற்கான சான்றாதாரங்கள் உள்ளன. கி.பி. 7-ஆம் நூற்றாண்டுவரை சமணர்கள் ஏராளம் பள்ளிகளை உருவாக்கி, தமிழ் வளர்த்தனர். சமணக் கோயில்களும் பள்ளி என்றே அழைக்கப்பட்டன, கோட்டாறு, நாகர்கோவில் பகுதிகளில் சமணப் பள்ளிகளும் சிதறால் பகுதியில் பல்கலைக்கழகமும் இருந்ததைச் சிதறால் கோவில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இங்கு பயின்றவர்கள் உலகெங்கும் சென்று பேராசிரியர்களாகக் கல்விப்பணி செய்துள்ளனர். திருவள்ளுவர் பிறப்பால் சமணரென்றும் சமணப் பட்டறையிலிருந்து வந்தவர் என்றும் கூறுகின்றனர். இக்காலத்தில் இரு வகையான பள்ளிகள் இருந்ததாகக் கல்வெட்டு ஆதாரங்கள் கிடைக்கின்றன. ஒன்று வெகுசன மக்களுக்கான **பையல் பள்ளி** மற்றொன்று குறிப்பிட்ட மக்களுக்கான **களரிப் பள்ளி**. பையல் பள்ளி ஆசிரியர்கள் அண்ணாவி எனப்பட்டனர். களரிப் பள்ளி ஆசிரியர்கள் ஆசான் எனப்பட்டனர். திருவிதாங்கூரில் நம்பூதிரிகள் வருகைக்கு முன்பு வரை சாதிப்பாகுபாடு இல்லாத அனைவருக்குமான கல்வி இருந்தது. குமரி மாவட்டத்தின் பெரும்பாலான வீடுகளிலும் ஏட்டுச்சுவடிகள் இருந்தது இதற்குச் சான்றாகும்.

பையல் பள்ளிகளில் எண்ணும் (கணிதம்), எழுத்தும் (மொழி), தத்துவம் தர்க்கமும் கற்பிக்கப்பட்டன. களரிப் பள்ளியில் வர்மம், மருத்துவம், அடிமுறை, மொழி, மற்றும் அனைத்து விதமான கலைகளும் போர்ப் பயிற்சிகளும் கற்றுக் கொடுத்தனர். நம்பூதிரிகள் வருகைக்குப் பின் இவை வேதபாடசாலையாகவும் மாறின. 17-ஆம் நூற்றாண்டில் கண்ணனூர் தச்சன்விளை அனந்தபத்மநபன் அவர்கள் 108 களரிப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களுக்குத் தலைவராக இருந்ததாகத் திருவிதாங்கூர் வரலாறு குறிப்பிடுகிறது. பரைக்கோடு கிராமத்தில் ஆசான்மார் நடத்திய குருகுலக் கல்வி நிலையங்கள் புகழோடு கல்விப்பணி செய்துள்ளன. பரைக்கோடு ஆசான் சான்றக் கரைகண்ட முத்தப்பனார் ஆசானிடம் புனித தேவசகாயம் பல மொழிகளையும், போர்ப் பயிற்சிகளும் கற்றதாகத் தொம்மந்திருமுத்து (1742) ஏட்டுச்சுவடி சாட்சியம் கூறுகிறது. ஆசான்மார் நடத்திய குடிப்பள்ளிகள் மரநிழலில்தான் இருந்தன. இங்கு ஓராசிரியரே இருப்பார். வசதி படைத்தவர்கள் அரிசியில் எழுதியும், ஏழைகள் மணலில் எழுதியும் படித்தனர். மணலையும் அரிசியையும் மாணவர்களே கொண்டு செல்ல வேண்டும்.

18-ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் குடிப்பள்ளிகள் தவிர, சீர்த்திருத்தத் திருச்சபையினர் தொடங்கிய ஒருசில ஆங்கில வழிப் பள்ளிகளும், திருவிதாங்கூர் மகாராஜாக்கள் தொடங்கிய ஒருசில அரசு ஆங்கிலப் பள்ளிகளுமே இருந்தன. திருவிதாங்கூர் நாட்டின் முதல் ஆங்கிலப் பள்ளி ஜெர்மனியிலிருந்து வந்த லண்டன் மிஷன் போதகர் ரிங்கில் தௌபே அவர்களால் 1809 செப்டம்பரில் மயிலாடியில் தொடங்கப்பட்டது. இப்பள்ளி இன்றும் ஒரு மேல்நிலைப் பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது. தொடர்ந்து 10/3/1810 அன்று தாமரைகுளத்திலும், 12/7/1810 அன்று புத்தளத்திலும், 28/7/1810 அன்று ஆத்திக்காடு, கோயில்விளை ஆகிய இடங்களிலும், 14/10/1810 அன்று ஈத்தாமொழியிலும் ஆங்கிலப் பள்ளிகளை உருவாக்கினார். 1819-ல் பெண்கள் மட்டும் பயிலும் பள்ளியாக டதி பெண்கள் பள்ளி நாகர்கோவிலில் மிஷனரி சார்ள்ஸ் மீட் மனைவி திருமதி. யோகன்னா மீட் அவர்களால் தொடங்கப்பட்டது. இதுவே திருவிதாங்கூரின் முதல் பெண்கள் பள்ளி. இப்பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம், கணிதம், பைபிள் என நான்கு பாடங்கள் கற்பித்துத் தரப்பட்டன.

பள்ளிகளில் தினமும் காலையில் கடவுள் வாழ்த்தும், **“வஞ்சி நாடாகிய திருவிதாங்கூரே! ஆளும் மன்னனே!,”** என்ற பொருளில் **“வஞ்சீச மங்களம்”** எனத் தொடங்கும் திருவிதாங்கூர் தேசிய கீதமும் பாடப்படும். 1836-ல் லண்டன் மிஷனரி திரு. ஜாண் ராபர்ட் அவர்களின் ஆலோசனையோடு திருவிதாங்கூர் மகாராஜா சுவாதித்திருநாள் ராமவர்மா திருவனந்தபுரம், கோட்டாறு, தக்கலை, காயங்குளம், சிறையின்கீழ் ஆகிய ஐந்து இடங்களில் ஐந்து அரசு ஆங்கிலப் பள்ளிகளை ஆரம்பித்தார். 1855-இல் உத்திரம் திருநாள் மார்த்தாண்டவர்மா கல்வித்துறைக்குக் கண்காணிப் பாளராக மிஷனரி திரு. சார்ள்ஸ் மீட் அவர்களை நியமித்தார். இச்சமயம் தாய்மொழி மட்டும் இருந்த பள்ளிக்கூடங்களில் ஆங்கிலமும் கற்பிக்க ஏற்பாடு செய்தார். 1860 முதல் 1880 வரை திரு. ஜெ.இ. லாஃப்ரான்னெய்ஸ் அவர்கள் திருவிதாங்கூரின் 18 பள்ளிகளுக்கும் கல்வித்துறை கண்காணிப் பாளராகச் செயல்பட்டு வந்தார்கள்.

1869-இல் தனியார்கள் நடத்திய தாய்மொழிப் பள்ளிகளுக்கும் உதவித் தொகை வழங்கும் திட்டம் திருவிதாங்கூர் அரசால் உருவாக்கப்பட்டது. அரசுப் பள்ளியில் கடைபிடிக்கும் பாடத்திட்டம், ஒரே பாடநூல், தகுதியான ஆசிரியர்கள், 1.9 சதுர மையில் அல்லது 792 குடிமக்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் போன்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பள்ளிகளுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. 1894-ஆம் ஆண்டய பள்ளிகளின் புள்ளிவிபரக் கணக்குபடி 86 பள்ளிகள் இருந்தன. கல்விக் கட்டணமாக ஒவ்வொரு மாணவரும் ஆறு ரூபாய் கட்டவேண்டும். இதனால் ஏழைகள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. 1895-இல் பிற்பட்ட மக்களுக்கு மட்டும் கல்விக் கட்டணத்தில் சலுகை வழங்கப்பட்டது. **(Travancore State Manual Vol.I, Page 482, V. Nagamaiah).**

மிஷனரிகள் நடத்திய ஒருசில பள்ளிகளில் ஆங்கிலம் மட்டுமே பயிற்றுவித்ததால்

திருவிதாங்கூர் அரசு 1915 ஆம் ஆண்டு அனைத்துப் பள்ளிகளிலும் தமிழும் மலையாளமும் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்தது. இதோடு கணிதமும் ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டன. இந்திய சுதந்திரத்திற்கு முன்பு வரை பள்ளிகளில் திருவிதாங்கூர் மகாராஜாக்களின் பிறந்த நாளை இராஜ திருநாள் என்று கொண்டாடுவது வழக்கம். திருவிதாங்கூர் கொடியுடன் ஊர்வலம் நடக்கும். பின் இனிப்புகள் வழங்கப்படும்.

**கத்தோலிக்கக் கிறிஸ்தவமும் கல்வியும்**

1329 ஆகஸ்ட் மாதம் 8-ஆம் நாள் திருத்தந்தை 22-ஆம் அருளப்பர் கொல்லம் மறைமாவட்டத்தை உருவாக்கினார். முதல் ஆயராக யோர்தான் கத்தானி செலராக் நியமிக்கப்பட்டார். தொமினிக்கன் சபை குருக்கள்தான் இக்காலகட்டத்தில் திருவிதாங்கூர் பகுதியில் கிறிஸ்தவத்தைப் பரப்பினர். இயேசுவின் சீடர் தோமையார் வந்த முதல் நூற்றாண்டு காலத்திலேயே கிறிஸ்தவம் திருவிதாங்கூர் நாட்டில் கால்கொள்ளத் துவங்கினாலும், 16 ஆம் நூற்றாண்டில்தான் வேகமாகப் பரவியது. 17-ஆம் நூற்றாண்டு முதல் பெல்ஜியம் நாட்டைச் சார்ந்த கார்மெல் துறவற சபையினர் கொல்லம் மறைமாவட்டத்தின் கீழிருந்த கோட்டாறு, காரங்காடு, வேங்கோடு போன்ற இடங்களில் பணி செய்ய வந்தனர்.

1882 வரை திருவிதாங்கூர் முழுவதும் கிறிஸ்தவர்கள் நடத்திய பள்ளிகள் கோவிலுக்குள்ளேயே இருந்தன. இதை அறிந்த திருவிதாங்கூர் அரசு 1882-இல் பள்ளிகளில் மறைக்கல்வி கற்பிக்கக் கூடாதென்று ஆணை பிறப்பித்தது. இதனால் கோவிலும் பள்ளியும் ஒன்றாக இருந்து மாறி பள்ளிக்கூடங்கள் தனியாகக் கட்டப்பட்டன. பணிசெய்யும் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உடனடியாக அரசின் அனுமதி (license) பெற மனு செய்யும்படியும் அறிவுறுத்தப் பட்டது. ஆசிரியர்கள் மாதம் ஏழு ரூபாய் சம்பளத்துடன் வேலைக்கு அமர்த்தப் பட்டனர்.

கி.பி 1902-இல் சுவிச்சர்லாந்து நாட்டைச் சார்ந்த **மேதகு. அலாசியுஸ் மரிய பென்சிகர்** அவர்கள் கொல்லம் மறைமாவட்டத்தின் ஆயரானார். இவர் பொறுப்பேற்றதும், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சிற்றாலயம், ஒரு கல்விக்கூடம், ஒரு கல்லறைத் தோட்டம், ஒரு பங்குப் பணியாளர் இல்லம் ஆகியவை கட்டப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார். இதனால் பெரும்பாலான ஊர்களில் தொடக்கப் பள்ளிகள் உருவாகின. குறிப்பாக, கடலோரக் கிராமங்களில் அருட்பணியாளர்கள் தொடங்கிய பள்ளிகள் மட்டுமே இருந்தன. உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு மேற்படிப்பதற்குக் கல்லூரிகளை உருவாக்காததால் கத்தோலிக்கர்கள் அனைவரும் உயர்படிப்பிற்குச் செல்ல முடியவில்லை. ஆனால் சீர்திருத்தத் திருச்சபையினர் ஸ்காட் கிறித்தவக் கல்லூரியை உருவாக்கினர்.

தொடக்க காலத்தில் பயிற்றுவித்தல் கடுமையான பணியாகவே இருந்துள்ளது. காரணம் மாணவர்கள் ஒரு மாதம் வந்துவிட்டு, திடீரென்று படிப்பை நிறுத்திவிடுவார்கள். கல்வி சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு நாள் திருப்பலியிலும் பதினைந்து நிமிடங்கள் வரை அருட்பணியாளர்கள் உரையாற்றுவராம். பத்து வயதுக்கு மேற்பட்டோர் வரை முதல் வகுப்பிலேயே இருப்பார்கள். படிப்பைப் பாதியில் விட்டுச் செல்வதால் தலைமையாசிரியரும் இதர ஆசிரியர்களும் வீடு வீடாகச் சென்று மாணவர்களைப் பிடித்து வருவார்களாம். பிள்ளை பிடிக்க வருகிறார்கள் என்று சில பெற்றோர்களே வீடுகளைப் பூட்டி விடுவார்களாம். பள்ளியில் மாணவர்களை உட்கார வைக்க இரண்டாண்டுகள் வரை நீடித்ததாக நாள்குறிப்பு ஒன்று சான்று பகர்கிறது.

இப்படி நம் முன்னோர்களாலும் மற்றும் இந்த நாட்டுக்கு மறைபரப்புப் பணிக்கு வந்த பணியாளர்களாலும்தான் அனைவருக்கும் கல்வி கிடைத்தது. பண்டிதர்களின் தலைப்பாகைக்குள் வைத்திருந்த கல்வியைப் பாமரர்களின் குடிசைகளுக்குக் கடத்துவதற்கு நாம் ஏராளம் போராட்டங்களையும் உயிர் ஈகங்களையும் செய்துள்ளோம் என்பதை உணர்ந்து கல்வியைக் கண்ணெனக் கொள்வோம். கல்வி ஒன்றுதான் நாம் சுயமரியாதையோடு வாழ வழிவகுக்கும்.

# பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்

## 01. கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு

### மறைக்கல்விப் பணிக்குழு

☆ 27.04.2025 – மறைமாவட்ட அளவில் பாலர் வகுப்பு முதல் பெற்றோர் வகுப்பு வரையிலான ஞாயிறு மறைக்கல்வி தேர்வு பங்குகளில் நடத்தப்பட்டது.

### விவிலியப் பணிக்குழு

☆ 06.04.2025 –முளகுமூடு, மாத்திரவிளை, காரங்காடு, வேங்கோடு ஆகிய மறைவட்டங்களில் விடுமுறை விவிலிய வகுப்பிற்கான பயிற்சிகள் நடைபெற்றன. மறைவட்டங்களின் முதன்மை அருள் பணியாளர்கள், மறைமாவட்ட இயக்குநர் மற்றும் மறைவட்டங்களின் இயக்குநர்கள் உட்பட 520, 252, 425, 252 என்ற எண்ணிக்கைகளில் மறையாசிரியர்கள் பங்கேற்றனர்.

## 02. இளைஞர் பணிக்குழு

### இ.கி.மா/இ.மா

☆ 27.04.2025 – மறைமாவட்ட தான விழிப்புணர்வு பயிற்சி நடைபெற்றது. மறைமாவட்ட பொதுக்குழு உறுப்பினர் 25 பேர் பங்கேற்றனர். பணி. எடிசன் பயிற்சியளித்தார்கள்.

### இளைஞர், இ.கி.மாஃஇ.மா இணைந்த செயல்பாடுகள்

☆ 06.04.2025 – மறைமாவட்ட சிறப்பு தியானம் வெட்டுவெந்தியில் வைத்து நடைபெற்றது. “எழுச்சிபெறும் இளையோருக்கு நம்பிக்கை தரும் பாடுகள்” என்ற தலைப்பில் அருள்பணி. சகாயதாஸ் அவர்களின் தியான உரையும், சிலுவைப்பாதையும் இடம்பெற்றன. இ.கி.மா இயக்கத்திலிருந்து 262 பேர், இளைஞர் இயக்கத்திலிருந்து 113 பேர் என மொத்தம் 375 பேர் பங்கேற்றனர்.

## 04. பெண்கள் பணிக்குழு

☆ 12.04.2025 – காரங்காடு, 24.05.2025 – மாத்திரவிளை ஆகிய மறைவட்டங்களில் களப்பயணமும் பயிற்சியும் நடைபெற்றன.

## 04. அன்பியப் பணிக்குழு

☆ 12.04.2025 மறைமாவட்ட அன்பிய பணிக்குழுவின் கருத்தாளர் பயிற்சி “போதை விழிப்புணர்வு” என்னும் சிந்தனையில் அருட்பணி. மரிய வில்லியம் அவர்களால் வழங்கப்பட்டது. 24 பேர் பங்கேற்றனர்.

☆ 04.04.2025 – வேங்கோடு, 11.04.2025 – புத்தன்கடை ஆகிய மறைவட்டங்கள் பொன்மலை தியானத்தை சிறப்பித்தார்கள். “நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்”, “அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்” ஆகிய சிந்தனைகளில் அருட்பணி. ராஜன் மற்றும் அருட்பணி. காட்வின் சௌந்தர்ராஜ் ஆகியோரால் தியான உரையும் வழங்கப்பட்டன.

☆ கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக, மருத்துவ செலவிற்காக பங்கு, ஒருங்கிணையம் சார்பாக ரூ. 3,13,750.00 வழங்கப்பட்டது.

## 05. நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு

☆ 01.04.2025 – பாரதப்பள்ளி, 06.04.2025 – பாலவிளை, காஞ்சாம்புறம், புத்தன்கடை, 13.04.2025 – சூழால், திரித்துவபுரம், 14.04.2025 – சந்தனபுரம், 21.04.2025 – சூசைபுரம், திக்கணங்கோடு ஆகிய இடங்களில் முழுநாள் தியானங்கள் நடைபெற்றன.

☆ 11, 12, 13 ஆகியநாட்களில் சிலுவைபுரம், 15, 16 ஆகியநாட்களில் முளவிளை ஆகிய ஊர்களில் தவக்கால

தியானமும், 25, 26, 27 ஆகிய நாட்களில் காக்கவிளை பங்கில் நற்செய்தி கூட்டமும் நடைபெற்றன.

**06. சமூகத்தொடர்வுபணிக்குழு**

☆ 18.04.2025 – குழித்துறை பங்கு பாடகர்களின் தவக்கால பாடல்கள், 20.04.2024 – வழுதனம்பள்ளம், CBSC மாணவர்களின் உயிர்ப்புபெருவிழா பாடல்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் ஒளிப்பதிவுச் செய்யப்பட்டு மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

☆ 24.04.2025 – மறைந்த திருத்தந்தையின் குறிப்புகள் அடங்கிய பாடல்களும், அருள்பணி. அலோசியஸ் அவர்கள் வழங்கிய திருத்தந்தையின் வாழ்க்கை வரலாறு அடங்கிய காணொளி மற்றும் அவரது அடக்கம் எப்படி நடைபெற உள்ளது என்ற அருள்பணி. டைட்டஸ் மோகன் அவர்களின் காணொளி ஆகியவை தேனருவி மீடியா Youtube channel-ல் ஒளிபரப்பப்பட்டது. மேலும், 26.04.2025 – மேதகு ஆயர் ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்கள், குருகுல முதல்வர் ஆகியோரின் இரங்கல் செய்தியும் தேனருவி Youtube channel-ல் ஒளிபரப்பப்பட்டது.

☆ 26.04.2025 – அருள்பணி. ஜாண் ஜிஜோ எழுதிய "அடங்கிப் போனது சமூக மனச்சான்றின் அறைகூவல்" என்ற திருத்தந்தையின் உலகளாவியை பணியை குறித்த கட்டுரை நமது தேனருவி Blogger-ல் பதிவுச் செய்யப்பட்டது.

**07. பொதுநிலையினர்பணிக்குழு**

☆ 3 ஊர்களில் அன்பிய நிர்வாகிகள் தேர்தல், 3 ஊர்களில் திருத்தூதுகழக நிர்வாகிகள் தேர்தல் மற்றும் 5 ஊர்களில் பங்குப்பேரவை நிர்வாகிகள் தேர்தல் ஆகியவை நடைபெற்றன.

அடுத்த இதழ் "**நலமாக வளமாக மகிழ்வாக**" என்ற சிந்தனையில் மலர இருக்கின்றது. புத்தாண்டு முதல் நமது புதிய தேடல் இதழை மெருகூட்டுவதற்கும் வாசகர்கள் எளிதில் படிப்பதற்கும் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு ஏற்ப தங்களது கவிதை, கட்டுரை, கதை. துணுக்குள், சிந்தனைகளை **1, $1^1/_2$, 2** பக்கத்திற்குள் **02-05-2025** –ம் தேதிக்கு முன் புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சிறந்த படைப்புகள் இதழில் வெளியிடப்படும். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

**ஆசிரியர்**
**புதிய தேடல்**

# Engagements of the Bishop: April 2025

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 01 | Marriage Mass | Konam | 10.00 am |
| | Board meeting at Annai Ada | Azhagiamandapam | 03.00 pm |
| 02 | Blessing of Pastoral Centre | Unnamalaikadai | 09.00 am |
| | Marriage Mass | Koottamavu | 10.00 am |
| | Contact Visit & Feast Mass | Mankuzhy | 05.30 pm |
| 03 | Meeting the Deacons | Bishop's House | 04.00 pm |
| 04 | Priestly Ordination | Thirithuvapuram | 04.30 pm |
| 06 | Curia | Bishop's House | 09.30 am |
| 07 | Feast Mass | Thickurichy | 06.30 pm |
| 09 | Feast Mass | Kattuvilai | 06.30 pm |
| 10 | Confirmation Mass | Kappukadu | 09.30 am |
| | Inauguration of the new Commission for Psychological well being | Unnamalaikadai | 04.30 pm |
| 11 | Confirmation Mass | Pacode | 09.00 am |
| | Feast Mass | Alankulam | 06.30 pm |
| 12 | Meeting Seminarians with their Parents | Chunkankadai | 10.00 am |
| 13 | Curia | Bishop's House | 09.30 am |
| | Contact Visit & Confirmation Mass | Kallukootam | 05.00 pm |
| 14 | Selection of Seminarians | Chunkankadai | 09.00 am |
| 15 | Feast Mass | Nattalam | 06.00 pm |
| 16 | Meeting the Major Seminarians | Bishop's House | 09.00 am |
| | Contact Visit & Feast Mass | Pilavilai | 05.30 pm |
| 17 | Meeting the Major Seminarians | Bishop's House | 09.00 am |
| | RMP District Level conference | Kalluvilai | 11.00 am |
| | Finance Committee meeting | Bishop's House | 03.00 pm |
| 18 | Contact Visit & Confirmation Mass | Maruthancode | 09.00 am |
| | Labor Day Program | Mulagumoodu | 04.00 pm |

| | | | |
|---|---|---|---|
| 19 | Marriage Mass | Kallupallam | 10.00 am |
| | Confirmation Mass | Kallaravilai | 06.00 pm |
| 20 | Curia | Bishop's House | 09.30 am |
| | Confirmation mass | Chetticharvilai | 05.30 pm |
| 21 | Graduation day at Pope John Paul II College of Education | Mulagumoodu | 10.00 am |
| | Confirmation mass | Pullani | 05.00 pm |
| 22 | Confirmation Mass | Eanchacode | 05.30 pm |
| 24 | Dalit Monitoring Committee Meeting | Unnamalaikadai | 05.00 pm |
| 25 | Contact Visit & Confirmation Mass | Kolvel | 09.00 am |
| 26 | Confirmation Mass | Kulasekharam | 05.00 pm |
| 27 | Consult | Bishop's House | 09.30 am |
| | Feast Mass – St. Antony's | Appattuvilai | 06.30pm |
| 28 | Marriage Mass | Sahayanagar | 09.00 am |
| 29 | TNBCLC | Tindivanam | |
| 31 | Achiever's Day at Annai Ada | Azhagiamandapam | 02.00 pm |
| | Contact Visit & Feast mass | Kozhiporvilai | 06.00 pm |

**நன்றியுணர்வோடு வணங்குகிறோம்...**

கடவுள் எம்மை அன்பு செய்கிறார்
கடவுளின் கரங்களில் எம்மை ஒப்படைக்கிறோம்
அச்சம் அகன்று முன்னோக்கி பயணிப்போம்
நாம் இயேசுவை பின்தொடர்கிறோம்
அவர் நமக்குமுன் செல்கிறார்
உலகிற்கு தேவை கிறிஸ்துவின் ஒளி



**திருத்தந்தை பிரான்சிஸ்**

**நம்பிக்கையோடு வரவேற்கிறோம்...**

துன்புறும் வறிய மக்களின் வருத்தங்களை என் இதயத்தில் ஏற்கிறேன்
வன்முறை முடிவுக்கு வரவும் பிணைக் கைதிகள் விடுதலை பெறவும் வேண்டுகிறேன்
மகிழ்ச்சி தருகிறது அமைதிக்கான பேச்சுவார்த்தை



**திருத்தந்தை லியோ XIV**

# TRINITY CENTRAL SCHOOL (CBSE)

## SENIOR SECONDARY

Affiliated to CBSE, New Delhi, Affiliation No.: 1930882
Chithirancode, Manalikarai - 629164
Kanyakumari District

**Run by RC Diocese of Kuzhithurai**





## 2025-2026 கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது







### நமது பள்ளியில்

- அருமையான உள்ளம் கவரும் இயற்கை சூழல்.
- நவீனமாயமாக்கபட்ட தொழில்நட்பத்துடன்கூடிய விசாலமான வகுப்பறை வசதி.
- நல்லெண்ணம், நம்பிக்கையோடு மாண்புற நிர்வகிக்கும் மறைமாவட்ட ஆயரின் தலைமையிலான அருட்தந்தையர்களை உள்ளடக்கிய நிர்வாகக்குழு.
- அக்கறை, அறிவு, ஆற்றல் மிகுந்த அருட்சகோதரிகளின் வழிகாட்டுதல்.
- கண்ணியமும் கடமை உணர்வும் கொண்ட ஆசிரியர்கள்.
- அனுபவமிக்க ஓட்டுநர்களுடன் கூடிய தரமான பள்ளி பேருந்து வசதி.
- இன்னும் புதுப்பொலிவுடனும் மனிதமாண்புடன் புதிய கல்வித்திட்டங்களுடனும்....

தொடர்புக்கு
**7598193238**

Date of Publishing : **19-03-2025**
Puthia Thedal Registered with Register og New Papers of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92/**2023 - 2025** Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office

The
Only Research Institute
in Kanyakumari District
Recognized by
Anna University

# St. XAVIER'S
CATHOLIC COLLEGE OF ENGINEERING
(Autonomous)
Chunkankadai, Nagercoil - 629003
Kanyakumari District, Tamil Nadu

## St. Xavier's Peculiarities...

- Anna University Recognized Research Institute
- Autonomous status
- 6 UG Programs Accredited by NBA
- Accredited with "A" Grade by NAAC
- Permanantly Affiliated with Anna University
- 430+ Genuine Placement offers Every Year with High Salary Packages
- 92% Graduation Rate & 80+ Faculties with Ph.D
- Active Centres of Excellence in Collaboration with Eminent Industries
- MSME Approved Business Incubation Centre
- 510 mpbs Wifi Enabled Campus



The only Engineering College in Tamil Nadu run by R.C. Diocese

UG Programs (ECE, EEE, Mech, Civil, CSE & IT)MBA & MCA Programs Permanently Affiliated
A NAAC
UG Programs (ECE, EEE, Mech, Civil, CSE & IT) Accredited by NBA
3.0 Star Ranking in IIC Rankings
Recognized under 2(f) & 112(B) of UGC Act. 1956
MSME Approved Host Institute
INSTITUTION'S INNOVATION COUNCIL (Ministry of HRD Initiative)
HILTEK AI & ROBOTICS

Edited & Published by **Rev. Fr. R. Paul Richard Joseph** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at Delta Offset Printers, Vellicode